கன்ன கிரயம்.

V5. No.33 25.8.1932.

ந
M211,N28KN
N32.5.33
199147

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

9 SEP 1932

Vol 5.] 1932 ஆகஸ்ட் மீ 25உ [No. 33

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 641
2. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 643
3. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் 645
4. நெய்தற்கலியுள் ஓர் செய்யுள் C. பழனிக்குமரன் 647
5. இறையனார் அகப்பொருள் (சில ஐயங்கள்) V. பரமசிவன் 649
6. காலைவிளி—ராவ்பகதூர் C. M. இராமசந்திரம் செட்டியார் B.A., B.L., 650
7. திருக்குறள் நீதி A. இராமலிங்கம் 651
8. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 651
9. வொர்ட்ஸ்வொர்த் (வானம்பாடி) P. C. ஜயவேலு 652
10. பொதிகைநிகண்டு (மரப்பெயர்த் தொகுதி) 653
11. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 3.) ஷேக்ஸ்பியர் நாடகம் 654
12. வர்த்தமானம் 659

கலாநிலயம்

விருப்பமும் கருவியும் 8.

விரும்புநிலை யாதெனத்தெரியாமலே, இருக்கும் நிலைக்கு மிக இரங்கி, அதனை மாற்றும்பொருட்டு, கருவிகள்தேடித்தேடிக் கருமங்கள் சூழ்வேம் எனக் கூட்டங்கள் கூடிக்கூடிச் சுழல்கின்ற மாந்தர்தம் மதியினை ஆராயுங்கால் ஊர்கின்ற வியப்பினை இதன்முன் இங்கு எடுத்துக்காட்டினோம். விருப்பத்தின் தன்மையும் அளவும் ஒருபுற மிருக்க, நீதி வாய்மை பெருந்தகைமை அனையவைகளைச் சார்ந்தொழுகும் மனிதன், தன் தனிநிலையில் ஒருவழியும் பொதுமுறையில் மறுவழியும் நடக்கின்றசெய்தியை நன்கு விளக்கியுள்ளகில்பர்ட் மர்றே என்னும் ஆங்கிலஅறிஞர்தம் அரியமொழிகளும்சென்றவாரம் இங்கெடுத்தெழுதப்பெறலாயின. பன்மையோடு உறழாத ஒருமையின் வஞ்சனை என்று யாம் இதன்முன் இயம்பிவந்தவைகளை இம்மொழிகள் செவ்விதின் விளக்கிக்காட்டும். பேசிப்பேசிப் பலபெருச்சுவார் எண்ணிறந்தோராயினும் உண்மையை உணர்ந்தவர் மிகமிகச் சிலர். குறிக்கோள் ஒன்று வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்னலாம் பலர்; ஆயினும், அவர்தாமும் அக் குறிக்கோள் யாவதா யிருத்தல் வேண்டும் என்பதை வரையறுத் துரைப்பது இன்றியமையாததெனக் கருதமாட்டார். அப்படி உரைப்பதுபோல் தோன்றுமிடங்களிலும், ஆராய்ந்து பார்க்குங்கால், விரும்பும் நிலையோ விளம்பப் பெறுமல் மற்று,கருவிகளே குறிக்கோள்களென்ன மயங்கிநிற்கக் காணலாம். செல்வமும் சுயராச்சியமும் வேண்டப்படுவன என்றுரைப்பவர், தம்வரையில் அவை ஒன்றும் குறிக்கோள் ஆகமாட்டாமை உணர்வதற்குரிய மதிநுட்பம் இன்றியே வாளா மொழியும் வாய்மொழிகளைச் செவிபடக்கேட்டு உழல்கின்ற இக்காலத்தில் தஞ்சை வழக்கறிஞர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A. B.L. அவர்கள், துறையூர்த் தமிழர்மகாநாட்டின்கண்கூறிய வரவேற்புமொழிகளில் சிலபொருளுரைகளைச் செவியேற்கப் பெறுகின்றோமெனின், அது, நம்முடைய முன்னையோர் முயன்று செய்த அருந்தவப்பயன் இன்னுஞ் சிறிது எஞ்சியிருக்கின்றதென நம்புவதற் காதாரமாகின்றது. அறிவும் அன்பும் உண்மையின்பால் ஊக்கமும் உடைய அவர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்:—

"முன்னேற்றம் பெறுதற்கு முயலும் மனிதர்கள் கலைத்திறன், நுண்ணறிவு, உடல்வலம், பொருள்வளம், அரசுரிமை ஆகிய இவற்றையே விரும்புகின்றனர். இவைமட்டும் வாய்த்தால் மன அமைதியும், இன்பவாழ்வும் மனிதர் பெறுதல் கூடுமா? இக் கூறியனவெல்லாம் அளவிலவாகப் பெற்றிருக்கும் அமெரிக்கரும் ஐரோப்பியரும் மன அமைதியுடன் சுகமே வாழ்கின்றனரா? சுப ஆட்சிபெற்ற ஒவ்வொரு நாட்டிலும் குழப்பம்; வாணிபமும் செல்வமும் மிக இருந்தும் வறுமை; படைத்திறனும் அதிகாரமும் அளவிலவாகப் பெற்றும் அயராக்கவலை; கிறித்துநாதரின் மெய்யுரைகளே தாம் கைக்கொள்ளும் வேதமெனப் பெருமிதம்பேசி, மக்களையும் நாடுகளையும், பிறர் உரிமைகளையும் தாந்தாமும் அடிப்படுத்த வேண்டுமெனுங் கருத்தினால் செய்துவரும் பொறாமை, வஞ்சனை, சூழ்ச்சி, தீச்செயல் ஆதிய கொடுமைகட்கு ஓர் எல்லைதானும் இல்லை. குருகர் என்னும் துரைமகனும், ஈன்சதீன் என்னும் துரைமகனும் வாணிபத்துறையில்கோடிக்

கணக்கான பொருளை ஈட்டினவர்; இகத்தில் பெறற்கரும்பேறுகள் அனைத்தையும் பெற்றிருந்தும், உயர்ந்த குறிக்கோள் யாதுமின்றி, உண்ணுவது முறங்குவதுமாகிய வாழ்க்கையில் இன்பநிலை காணாது உவர்த்து, அவமே தமது உயிரை மாய்த்துக்கொண்டனர். மேனாட்டினர், நாகரிகத்தின் உயர்நிலையை அடைந்தவர் எனும் மயக்க உணர்ச்சியால் அன்னாரின் ஒழுகலாறுகளையும் மனப்பான்மைகளையும் நம்மவரிற் பலர் கைக்கொள்ளுகின்றனர். 'நாளையே கூற்றுவன் வருவான்; இன்றே உண்டு களியுங்கள்' என்ற கொள்கையால் ஆடவர் பெண்டிர் எனப்படுவோர், தமது பழங்குடி மரபுகளை ஓம்பாது களியாட்டயர்தலே நோக்கமாகத் தமது மனிதத்தன்மைகளை நாடோறும் இழந்துவருவதைக் கண்டு மேனாட்டு மூதறிஞர்கள் மிகவும் கவல்கின்றனர். வெளிமயக்குக்களால் ஏமாற்றமடைந்து, மேனாட்டினரின் சீர்கெட்ட கொள்கைளும் ஒழுகலாறுகளுமே நாகரிகமெனக்கொண்டு அவற்றையெல்லாம் பன்னாடைகளைப்போல் கைக்கொள்ள முயலும் நம்மவரின் ஏழைமைக்கு மிகவும் இரங்குகின்றோம். குடித்தனங்கள் மனைமாட்சியற்று மாய்ந்துபோக விட்டு, துரைத்தனத்தைச் செப்பனிடுவது அறிவுடைமையோ? உலகியல் நெறியில் உயர்நிலை எய்தியுள்ள மேனாட்டினரின் வாழ்க்கை நாகரிக மல்லவெனின், நாகரிகமென்பது தான் என்ன? நாகரிகம் என்பதற்கு நகரத்தனம் (Civilization) என்பது மேனாட்டினரின் விடை. வறுமை, பிணி, படிற்றொழுக்கம் ஆதியன நகரங்களில் மலிந்திருக்கின்றன. இங்குக்கலையறிவுமிகுந்தும், நடையுடைபாவனையாகிய வெளித்தோற்றங்கள் மாறியும் காணப்படுகின்றன. நாகரிகத்தின் பண்புகள் இவைதாமோ? ஆமெனின், இவை வேண்டப்படுவனவா? என்பது அறிவுடையோர் ஆராய்ச்சிக்குரியது. நாகரிகம் என்ற சொல்லே, வடமொழி நூல்களில் பயிலப்பட வில்லையெனவும், இதன் அடிச்சொல் (Root-word) யாதெனவும், இம்மொழி ஆக்கத்தின் விதியாதெனவும் உசாவி, நாகரிகம் என்பது வடமொழியாளர் அறியாததொன்றெனவும் தெரிந்துகொண்டேன். இங்ஙனமாக மேனாட்டுக் கலைவாணராலும், வடமொழியாளராலும் உரைதானும் காணலாகாத நாகரிகம் என்னும் பதத்தினைத் தெய்வப்புலவராகிய திருவள்ளுவராதியோர் கண்ணோட்டம், இரக்கம் என்ற பொருளில் வழங்கினர். பெறற்கரும் பேறுகளையெல்லாம் ஒருங்கே பெற்றானெனினும் இரக்கமொன்றில்லையேல் அவனை நாகரிகன் எனத் தமிழறிஞர் மதியார். தம்மவர், வறுமையாலும் பிணியாலும் அறியாமையாலும் தம்மருகே இடரும் இன்னலுமுற்று வருந்த, தாமமட்டும் உண்டு களித்திருப்பது மனிதத்தனம் அல்லவென்பதைக் கடைபித்து "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் தமிழ்மறை, அறுதியிட்டது. பிறப்பினால் ஒருவற்கு உயர்வு தாழ்வுகள் வாய்ப்பதே முறை என்னுங்கொள்கை தமிழ்நாட்டில் நுழையத் தலைப்பட்டதும், 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்', 'சாதி யிரண்டொழிய வேறில்லை' 'ஒழுக்கம் உயர்குடி உய்க்கும்' 'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழலல்லர்' என்றெல்லாங்கூறித் தமிழ்மூதறிஞர் கடிந்திருக்கின்றனர். திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பெத்தான் சாம்பான் ஆதியவர்களின் உண்மை வரலாறுகளினின்றும் நாம் அறியத்தகும் படிப்பினை யாது. சைவ வைணவத் தலைவர்கள் தொண்டக் குலத்திற் சேர்ந்தவர்; பிறப்பினால் எந்த இனத்தாராயினும்,

"எவரேனுந் தாமாக விலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
உவந்தடிமைத் திறநினைந் தங்குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார்"

என்றவாறெல்லாம் பாராட்டி ஒழுகினர்.

மறையவர் குலத்திற் றோன்றிய அழலோம்பும் அப்பூதியடிகள் அப்பமூர்த்திகளைத்தனது தியானப்பொருளாகவும் வழிபடுகடவுளாகவுங் கொண்டு உய்திபெற்றனர். திராவிட சிசுவெனச் சங்கரரால் புகழ்ப்பெற்ற திருஞானசம்பந்தர் திருப்பாணாழ்வாருடன்தோழமை கொண்டும் திருநாவுக்கரசரைத் தமது ஞானத்தந்தையே எனவும் போற்றி வாழ்ந்தனர். மணிவாசகப்பெருமானும் பிறப்பினால் உயர்வு பேசும் கொள்கையினரைச் "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஏதமிலி" எனக் கடிந்திருக்கின்றனர். பிறப்பால் உயர்வு தேடும் பெற்றியினர், தமது வெளிப்பூச்சும் தாழ்வடமுமே சிறந்த ஆசாரமெனக் கருதி ஏனோரைத் தாழ்வுசெய்கின்றனர். தமிழர் மதிக்கும் ஆசாரம் இதுவன்று.

"நன்றி யறிதல், பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசாரவித்து."

என்பதே பழந் தமிழ்மக்கள் பாராட்டி வளர்த்த ஆசாரம். தமிழ்ப் பெருங்குடிமக்களாயினோர் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்டலுமிலர்; பிறரஞ்சுவ தஞ்சிப் புகழெனி னுயிருங் கொடுக்குவர்; பழியெனி னுலகுடன் பெறி னுங்கொள்ளார், தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர்! இச்சீரிய கொள்கைகளைப் பின்பற்றிய ஒழுக்கமே தமிழர் நாகரிகம். கல்விச்செல்வம் பொருட்செல்வம் ஆகிய இரண்டு செல்வங்களையும் ஒருங்கே பெற்றாலும், அரசியல் உரிமைகள் அனைத்தையும் அடைந்தாலும் இக்கூறிய நாகரிகப் பண்புகள் மனிதர்மாட்டு அமையாவிடில் தாம்பெற்ற செல்வம் ஆதியவற்றால் தமக்கும் பிறர்க்கும் கேடுகள் விளையும் என்பது ஒருதலை. நாகரிகத்தின் உண்மைப் பண்புகளைத் தெரிந்து, அச் சென்னெறியில் ஒழுகிச் சிறந்தநிலையில் வாழ்க்கையை நடத்திய சீரியோரது வரலாறுகளைக் கற்றுணர்ந்து கோடற்குப் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும் தமிழ்க்கலைகளும் தமிழ்க் கல்வியும் இன்றியமையாத சாதனங்கள்."

* * *

ஆதலின் கலாநிலயம் தன்னுடன் ஒக்க நினைக்கின்ற உறவினர் ஒருவரை, திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களில் இனிதுகண்டு கரைசெயற் கரியதோர் உவகைஎய்துகின்றது. நாகரிகம் என்ற சொல்லிற்கு இவர் கண்ட உண்மைப் பொருளிற் இணங்க, பெயக்கண்டும் நஞ்சுண்டமையும் [illegible] ல்லோரும் விரும்பி முயல்வதற்குரிய குறிக்கோள் ஆதல் வேண்டும் என்றிவர் கட்டுரைத் தறிவுறுத்திய நன்மொழிகளைத் துறையூர்மகாநாட்டிற்குப் போந்திருந்தவர்களில் ஒருசிலரேனும் கருத்துட்கொண்டு கடைபிடிப்பாராயின் மிக விரைவில் மனிதவாழ்க்கை இனிதுமாறிமேம்பாடடையத் தலைப்படுமே. பின், "சமுகவாழ்வில் பலதிறப்பட்ட சீர்திருத்தங்கள் இன்றியமையாது வேண்டப்படும்" என்று பிள்ளையவர்கள், முன் தாம் இயம்பியதற்குச்சிறிது முரண்படுகின்றதோஎன்று நாம் அயிர்க்கும்படி பேசுதற்கும் அமயம் வாய்த்திடாது. கண்ணோட்ட முடைமையே குறிக்கோளாகி அதுவுங் கைவரப்பெறுங்கால் அதற்கேற்பச் சமுகவாழ்க்கை தானே தக்கவாறெல்லாம் திருந்தி யமையுமாதலின், சீர்திருத்தமென்று செய்யவேண்டியது ஒன்று மில்லையன்றோ. குறிக்கோளிற்கு ஏற்க வாழ்வின் வகையுந் திறமும் அமையுமே யல்லாது, சமுகவாழ்வில் எத்தனைத் திறப்பட்ட சீர்திருத்தங்கள் செய்யினும் அது ஒரு குறிக்கோளைப் பிறப்பிக்காதென்பது வெளிப்படை. இக்காலச் சமூகவாழ்வு திருந்த வேண்டுவது இன்றியமையாததென்பதில் யாதும் ஐயமில்லை. மற்று, பலதிறப்பட்ட திருத்தங்கள்தாம், குறிக்கோளொன்று கண்ணோட்டமென்பது திண்ணமாயின், மிகையன்றோ. ஆதலாற்றான் திருத்தப் புகுவதெல்லாம் திரித்துவிடுவதாய் முடிகின்ற பரிபவத்தைக் காண்கின்றோம்.

கண்ணோட்டமே குறிக்கோளாகி மானுடவாழ்க்கை திருந்துதற்கு, சிற்பமென்றும் சித்திரமென்றும் சங்கீதமென்றும், கர்வியமென்றுந் தோன்றித் திகழ்கின்ற நுண்கலையுணர்வின் வளர்ச்சியே கருவியாகும் என்றென்று எண்ணில் பன்முறை எடுத்தியம்பி வற்புறுத்தும் நம் கலாநிலயம், யாவராலும் போற்றி வளர்க்கவேண்டிய தமிழ்ப் பத்திரிகைளில் ஒன்றென்று திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் தம் வரவேற்புக் கட்டுரையின் இறுதியில் கூறியிருப்பது எம் ஊக்கத்திற்கு உதவியளித்தபடியாகும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[626-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 6-ம் தசகம்
1-ம் பாசுரம்.

செய்ய தாமரைக் கண்ண னாயுல
கேழு முண்டவன் கண்டீர்
வையம் மனிதர் தெய்வ மற்றும்
மற்று மற்று முற்றுமாய்ச்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப்
பட்டிவை படைத்தான் பின்னு
மொய்கொள் சோதியோ டாகி னானொரு
மூவ ராகிய மூர்த்தியே.

அவதாரிகை: சென்ற தசகத்தில் ஆழ்வார், 'பிதற்றுமின் பேதமை தீர்ந்து' என்று ஆச்ரயிக்கச் சொல்லிக் கற்பித்திருந்தும் ஜனங்கள் அவ்வாறு தொழுது வழிபாடுசெய்ய உற்சசாகங் கொள்ளாதிருப்பது கண்டு, அவன் எவ்வளவு மாட்சிமையுடையனேனும் மிகத் தாழ்ந்தவர்களோடும் சுலபமாய்க் கலக்கும் சுபாவமுடையவன் என்பதை அறியாமையாலே எம்பெருமானை ஆச்ரயியாது ஒழுகுகின்றார்களென்பதுணர்ந்து அவர்களைக் குறித்து அவன் சுலபத்தை இத்தசகத்தில் அருளிச்செய்கிறார்.

செய்ய சூழ்சுடர் ஞானமாய் - ஸ்வய சக்தியாலே வியாபிக்கும் ஸவப்பிரகாச ஞாநசாலியாய், வையம் - கீழ் உலகங்களெல்லாம், வானம் - மேல் உலகங்களெல்லாம், மனிதர் - மனுஷர், தெய்வம் - தேவதைகள், மற்றும்—இதற்கிடையிலுள்ள எல்லாவற்றையும், மற்றும்-பூதபஞ்சங்களும், மற்றும்-ஸூக்ஷமமான மஹத்தாதிகளும், முற்றுமாய்-ஆகவே மேற் சொன்ன எல்லா வஸ்துக்களுமாய், வெளிப்பட் டிவை படைத்தான் - இப்படித் தோற்றுகிற இவைகளடையத் தான் சிருஷ்டித்தவனை, பின்னும் - இந்த வைபவத்தின் மேலே, மொய்கொள் - நெருங்கிய, சோதியோடாகினான்-ஜோதியோடு கூடியிருக்கின்றவனை, ஒரு மூவராகிய ஒப்புக்கூறக் கூடாத மூன்றுமூர்த்திகளின் ரூபனை, மூர்த்தி - ஓரே ஸ்வாமியானவன்; செய்ய தாமரைக் கண்ணனாய் உலகேழு முண்டவன்—எல்லா உலகங்களையும் பிரளயகாலத்தில் விழுங்கின செந்தாமரைக் கண்ணன்.

குறிப்பு:—ஆகையால் எல்லா உலகத்தாரும் ஒக்க ஆச்ரயித்து உய்தற்குரியதெய்வம் எம்பெருமான் என்கிறார். மேல் பாசுரங்களில், இம்மஹிமையுள்ள எம்பெருமான் சுலபன்; எல்லாரும் கூசாதே அணுகிப் பூஜித்து வழிபாடுகள் செய்து அடைக்கலம் புகலாம், என்று கற்பிக்கிறார்.

2-ம் பாசுரம்.

மூவ ராகிய மூர்த்தி யைமுதன்
மூவர்க்கு முதல்வன் றன்னைச்
சாப முள்ளன நீக்கு வானைத்
தடங்கடற் கிடந்தான் றன்னைத்
தேவ தேவனைத் தென்னி லங்கை
எரியெழச் செற்ற வில்லியைப்
பாவ நாசனைப் பங்க யத்தடங்
கண்ண னைப்பர வுமினோ

மூவராகிய மூர்த்தியை - பிரம்மா சிவன் ஹரி என்கின்ற மூன்று மூர்த்திகளாகத் தன்னை ஏற்படுத்திக் கொண்டவனை, முதல் மூவருக்கும் முதல்வன் தன்னை - பிரதானமான மூன்று தேவதைகளான பிரம்மா சிவன் இந்திரன் இவர்களுக்கு நிர்வாஹகனை (அதாவது காரணபூதனை) சாபமுள்ளன - சாபங்கள் என்று உள்ள எல்லாவற்றையும், நீக்குவானை—விலக்குபவனை, தடம் கடல்கிடந்தான் தன்னை தேவ தேவனை - பாற்கடலில் தேவதைகள் தன்னை இலகுவாய் ஆச்ரயிக்கப் பள்ளி கொண்டவனை, தென் இலங்கை எரிஎழச் செற்ற வில்லியை - ராமாவதாரம் செய்து சீதாபஹாரம் செய்த குற்றத்திற்காக ராவணனது இலங்கையைக் கொளுத்தின வில்லியை, பாவநாசனை - கண்களால் காணும் மாத்திரத்திலே ஜனங்களின் பாபங்களைப் போக்குகிறவனை, பங்கயத் தடங் கண்ணனை-தாமரைமலர்போல்

199147

அழகான நேத்திரங்கள் உடையவனை, பரவுமினோ - துதி செய்யுங்கோள்.

குறிப்புக்கள்:—பாபமுள்ளன நீக்குவானை-பிரம்மாவுக்கு வேதாபஹார குற்றத்தையும், சிவனுக்குக் குருபாதஹ தோஷத்தையும் போக்கினவன் என்று குறிப்பிடுகிறபடி. ஸ்ரீராமாவதாரத்தை இங்குக் கூறியது - தேவதேவனாயிருந்தும் ஆச்ரிதர்களின் அநிஷ்டங்களைப் போக்கி உலகத்தை அளிக்கும்பொருட்டு மனுஷ ரூபமாய் எல்லா மனிதரும் வானரரும் தன்னோடு, கூடக் கலக்கச் சுலபனாயிருந்தருளினனென்று காட்டுதலின் நிமித்தம் என்று கொள்ளவேண்டும்.

குறிப்பு:—தேவாலயங்களில் திருபிருதிஷ்டை செய்துள்ள எம்பெருமானைத் தினந்தினம் பிம்ப தரிசனம் செய்தால் அன்று அன்று செய்யும் பாவங்கள் அப்போதிற்கப்போதே தொலைந்துபோகுமென்பது சாஸ்திரம். பிம்பதரிசனத்திற்கே இம்மாட்சிமை உண்டென்றால் ஸ்ரீராமபிரான் ஸ்ரீ கிருஷ்ணபிரான் முதலான பிரத்தியக்ஷ மூர்த்திமான்களை ஸேவை செய்தால் எல்லாப் பாவங்களும் உடனே தொலைந்து போகுமென்று சொல்லல் வேண்டுமோ? பாபங்கள் நசிப்பது கைமுக்த நியாயததால் நிச்சயம். பகவானது ஸ்வரூபத்துக்குள்ள இந்தச்சக்தியாம் "பாவநாசத்துவத்திற்கு" ஆரியத்தில் "சுபாசிரயம்" என்று பெயர் வழங்கப்பெறும். மேல் - 9-ம் பாசுரத்தில் பக்தர்கள் அவரவர் கோரும் உலோக விக்கிரகங்களிலும் பகவான், அவர்கள் வழிபடக் குடிகொள்வானென்று கற்பிக்கப் போகிறார்.

3-ம் பாசுரம்

பரவி வானவ ரேத்த நின்ற
பரம னைப்பரஞ் சோதியைக்
குரவை கோத்த குழக னைமணி
வண்ண னைக்குடக் கூத்தனை
யரவ மேறி யலைக டலம
ருந்துயில் கொண்ட வண்ணலை
யிரவும் நண்பக லும்விடா தென்று
மேத்து தன்மனம் வைம்மினோ.

உரை:—பதக்குறிப்புகள்-குரவைகோத்தகுழகனை-வாயால் பாடித் தாளத்துக் கேற்ப ஸ்ரீ கிருஷ்ண பகவான் கோபிமார்களோடு கைகள் கோத்து ஆடிய ஓர் வகைக் கூத்து, இது "ராஸக்கிரடை" என்று ஸ்ரீ பாகவதத்தில் அழைக்கப்படுகின்றது. மணிவண்ணன் - உயர்ந்த ரத்நங்களின் ஸ்வபாவமுடையவன்; எவ்வண்ணம் ஓர் உயர்ந்த ரத்நத்தைத் துணியின் தலைப்பில் முடிந்துகொண்டு வேண்டியபோது அநுபவிக்கலாமோ அதுபோல் நாம் வேண்டும்போது அநுபவிக்கக் கூடியவன், அதாவது அவ்வளவு சுலபன். குடக்கூத்தன் - வாணஸுரனைக் கொன்ற பிறகு உலகத்தாருக்கு அவன் பீடை நிவர்த்தியானதின் நிமத்தம் குடத்தை எடுத்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆநந்தக் களிப்பால் ஆடிய ஆட்டம்.

தாத்பரியம்:—அலைகள் புரளும் க்ஷீராபதியில் ஆதிசேஷன்மேல் ஏறித் துயில் அமர்ந்திருக்க, தேவர்களால் துதிக்கப்பெறும் பரஞ்சோதியை இரவும் பகலும் விடாதே நீங்களும் துதிசெய்வதில் மனம் வையுங்கோள். வைகுண்டமான பரமபதத்தினின்றும் பகவான், சௌசணியத்தால் தாழ்ந்து, வானவர் பூஜைகளை ஏற்கத் திருப்பாற்கடலுக்கு இழிந்தானென்பது திருவுள்ளம்.

4-ம் பாசுரம்.

வைம்மின் நும்மனத் தென்று யானுரைக்
கின்ற மாயவன் சீர்மையை
யெம்ம னோர்க ளுரைப்ப தென்னது
நிற்க நாடொறும் வானவர்
தம்மை யாளு மவனும் நான்மு
கனும்ச டைமுடி யண்ணலுஞ்
செம்மை யாலவன் பாத பங்கயஞ்
சிந்தித் தேத்தித் திரிவரே.

உரை:—உங்கள் மனத்தில் எப்போதும் வைத்துச் சிந்தியுங்கோள் என்று யான் எம்பொருமானது சீர்மையைப்பற்றி உரைப்பதும் என்போலிகளான வேறு உம்மபக்ஷத்தில் அனுபவம் வாய்ந்தவர்களும் உங்கள் ஹிதத்தை நாடிச் சொல்வதை ஆதரவு பற்றவேண்டாம். சென்ற பாசுரத்தில் செப்பிய, வானவர்கள் மாத்திரமல்லாமல் அவர்களை எல்லாம் ஆளும் (அவனும்) இந்திரனும், நான்முகப் பிரம்மாவும் ஜடாமண்டலதாரியான ஆற்றல் மிகவும் உடைய ருத்திரரும் யாதொரு கபடமன்றிக்கே எம்பெருமானது திருப்பாதத் தாமரைகளை எப்போதும் சிந்தித்துப் புகழ்பாடித் திரிவதைக் கவனித்தீர்களாயின் எம்பெருமான் எல்லாரோடும் ஒரு நீராகக் கலக்கும் ஸௌசீல்யனென்பது உங்களுக்குப் புலப்படும்.

5-ம் பாசுரம்

திரியும் காற்றோ டகல்வி சும்பு
திணிந்த மண்கிடந் தகட
லெரியும் தீயோ டிருசுடர் தெய்வம்
மற்று மற்றும் முற்றுமாய்க்
கரிய மேனியன் செய்ய தாமரைக்
கண்ணன் கண்ணன்விண் ணோரிறை
சுரியும் பல்கருங் குஞ்சி யெங்கள்
சுடர்முடி யண்ணல் தோற்றமே.

அவதாரிகை:-இதுவரையில் பரோபதேசம் செய்த ஆழ்வார், வானவர்கள் சிவபெருமான் முதலாயினோர் தம் சிந்தையில் எம்பெருமானை எக்காலத்திலும் வைத்துத் திரிவரென்றார். தம் சொந்த அநுபவம் எவ்வாறு தமக்குப் புலப்படுகின்றதென்பதை இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

ஆகாயத்தில் எப்போதும் திரியும் காற்றுக்கும், விசாலமான ஆகாயத்திற்கும், சேர்ந்து இறுகிக்கிடக்கும்பூமிக்கும், எல்லை கடவாதே கிடக்கும் சமுத்திரத்திற்கும், எரியும் நெருப்புக்கும், சூரிய சந்திரர்களுக்கும், மனுஷர்களுக்கும், தேவர்களுக்கும், மற்றும் எல்லாப் பிராணிகளுக்கும் (அதாவது பஞ்சபூதாதிகளுக்கும்) உலகு எல்லாவற்றிற்கும், சரீரகனை எம்பெருமான், நீர்கொண்ட மேகம்போல் வர்ணமுள்ளவனாய், தாமரைமலர் போன்ற கண்களோடுகூடி, அதி மனோஹரனாய் நித்திய ஸூரிகளுக்கும் நிர்வாகனாயிருக்கும் பேராற்றல் உடையகிருஷ்ணபகவானாக, சுருண்ட முன்னுச்சி மயிருடனே தேஜோமய கிரீடயுக்தினாய் என்மனதுள் எப்பொழுதும் விளங்காநின்றான்.

குறிப்பு:—ஆழ்வார் ஏனையவர்போல் மோக்ஷநிமித்தமாய்ப் பக்தியோக அநுஷ்டாநம் செய்யாதவரேனும், ஸ்வப்பிரயோஜநமாய் அதின் சுவையின்பொருட்டுப் பக்தியோகத்தை அநுஷ்டித்தாரென்று கொள்ளவேண்டும்.

தமிழ்ப் பாடம் 33.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[625-வது பக்கத் தொடர்ச்சி]

கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி. 52.

கருத்து:—விதியின் கொடுமையால் நளன் தமயந்தியோடு காடுநோக்கிப் புறப்பட்டான் என்பதை இச்செய்யுள் கூறுகின்றது. அவ்வாறு அவன் போகும்போது மாவிந்தநகர மக்கள் பிரிவிற்கு ஆற்றாது அழுதனர் என்பது பின் செய்யுள்.

ஆருயின் றாயே யறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 53.

பதப்பிரிவு:-ஆர் உயிரின் தாயே அறத்தின் பெரும் தவமே பேர் அருளின் கண்ணே பெருமானே பார் இடத்தை யார் காக்க போவது நீ யாங்கு என்றார் தம் கண்ணின் நீர் வார்த்து கால் கழுவாநின்று.

அன்வயம்:—தம் கண்ணின் நீர்வார்த்துக் கால் கழுவாநின்று "ஆர் உயிரின் தாயே, அறத்தின் பெருந் தவமே, பேர் அருளின் கண்ணே, பெருமானே, பார் இடத்தை யார் காக்க நீபோவது, யாங்கு?" என்றார்.

பதவுரை.

தம் - தங்களுடைய
கண்ணின் - கண்களிலிருந்து
நீர் - ஜலத்தை
வார்த்து - விட்டு
கால் - (புழுதிபடிந்த நளனது) கால்களை
கழுவாநின்று - கழுவி,
ஆர் - அருமையான
உயிரின் - உயிர்களுக்கு
தாயே - தாயாயிருப்பவனே,
அறத்தின் - தருமத்தின்
பெரும் - பெரிய
தவமே - தவப்பயனாக உதித்தவனே,
பேர் - பெரிய
அருளின் - கருணையினுடைய
கண்ணே - கண்போன்றவனே,
பெருமானே - எங்கள் தலைவனே,
பார் இடத்தை - பூமியை (இனி)
யார் - யார்
காக்க - காக்கும்படிவிட்டு
நீ - நீ
போவது - போய்விடுவது?
யாங்கு - எங்குப்போகின்றாய்?
என்றார் - என்றழுதார்.

விரிவுரை:-நளனுடைய வாய்மையைக் காட்டுவதற்கு, அவனது பிரஜைகள் அவனிடம் மிகுந்த அன்புடையவர்களாயிருந்தனர் என்று கூறுவது அவசியம். புட்கரனுக்குப் பயந்து அவன் போகவில்லை. சொன்ன சொல் தவறினனென்று பின் குடிகளே தன்னை இகழ்ந்து புறக்கணிப்பார்களோ என்று அஞ்சியும் அவன் போனவனல்லன். 'சூதிற்சொன்ன சொல்லிற்கு நான் கட்டுப்படமாட்டேன்' என்றியம்பி, நாட்டைப்புட்கரனுக்குக் கொடுக்க மறுத்திருப்பானாயினும் ஒருவரும் குறை கூறியிரார். பின்னொரு செய்யுளில் சனங்கள், 'போகத்தான் வேண்டுமாயின் நீ இன்னொரு நாளாவது இந்நகரிலிருந்து நாளை ஏகலாகாதா' வென அவனைப் பரிவோடு வேண்டுவதையும் புகழேந்திப்புலவர் சொல்லிக் காட்டுகின்றார். என்வரினும் மெய்ம்மையை மெய்ம்மைக்காகவே. கடைபிடிக்கும் மேன்மக்களின் தன்மையை அடுத்த செய்யுளில் காணுவோம். அத்தகையவர்களில் ஒருவன் நளனானதால் அவன்கொடுத்த வாக்குச் சூதிலேயே யானாலும் அதனைக் காப்பான என்பது நிச்சயம்.

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்மை
அழிவரோ செங்கோ லவர். 54.

பதப்பிரிவு:—வேலை கரை இழந்தால் வேதம் நெறி பிறழ்ந்தால் ஞாலம் முழுதும் நடு இழந்தால் சீலம் ஒழிவரோ செம்மை உரை திறம்பா செய்கை அழிவரோ செங்கோல் அவர்.

அன்வயம்:---வேலை கரை இழந்தாலும் வேதம் நெறி பிறழ்ந்தாலும், ஞாலம் முழுதும் நடு இழந்தாலும், செங்கோலவர் சீலம் ஒழிவரோ, உரை திறம்பாச் செம்மைச் செய்கை அழிவரோ!

பதவுரை.

வேலை - கடலானது
கரை - (தனனுடைய) கரையை
இழந்தால் - கடந்துவிட்டாலும்,
வேதம் - வேதங்களே
நெறி - நல்நெறியினின்று
பிறழ்ந்தால் - தவறினாலும்,
ஞாலம் பூலோகம்
முழுதும் - முழுவதும்
நடு - நடுவாக அந்தரத்தில்
நிற்கின்ற நிலையை
இழந்தால் - இழந்து விழுந்தாலும்,
செங்கோலவர் - செங்கோல் செலுத்து
கின்ற அரசர்
சீலம் - தமக்குரிய நல்லொழுக்கத்தை விட்டு
ஒழிவரோ - விலகுவாரோ!
உரை - சொல்லிய சொல்
திறம்பா - மாறாத
செம்மை - செம்மையாகிய
செய்கை - கருமங்கள்
அழிவரோ - கெடுவாரோ!

குறிப்பு:—இழந்தால் பிறழ்ந்தால் இழந்தால், என்னும் சொற்களுக்குப்பின் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்கின்றது. வேலை கரை இழந்தாலும், வேதம் நெறி பிறழ்ந்தாலும், ஞாலம் நடு இழந்தாலும், உத்தம வேந்தர் சீலம் ஒழியார் செய்கை அழியார், என்பது கருத்தாதலால் உம் மூன்றும் உயர்வுசிறப்புப் பொருளில் வந்திருக்கின்றன. ஒழிவரோ அழி

வரோ, என்னும் சொற்களின் இறுதியில் இருக்கும் ஓ காரங்கள் எதிர்மறைப் பொருள்தரும். இடைச்சொல் இலக்கணத்தை மறவாமல் காக்கவிரும்புவீராயின், முன் இதுபற்றி வரைந்திருக்கின்ற பக்கங்களை எடுத்து மீண்டுமோர்முறை கற்பது நலமாம்.

திறம்பா, என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வடியேறு கூரிலைவேன் மன்னுவோ வுன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில் [தார்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க வென்றுரைத்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து. 55.

பதப்பிரிவு:—வடி ஏறு கூர் இலை வேல் மன்னு ஓ உன்தன் அடியேங்கட்கு ஆதரவு தீர கொடி நகரில் இன்று இருந்து நாளை எழுந்துஅருள்க என்று உரைத்தார் வென்று இருந்த தோளான் தாள் வீழ்ந்து.

அன்வயம்:—வென்று இருந்த தோளான் தாள் வீழ்ந்து, "வடி ஏறு கூர் இலை வேல் மன்னுவோ, உன்தன் அடியேங்கட்கு ஆதரவுதீரக் கொடிநகரில் இன்று இருந்து நாளை எழுந்து அருள்க" என்று (சனங்கள்) உரைத்தார்.

பதவுரை.

வென்று - (பகைவரை) வென்று
இருந்த - இருந்த
தோளான் - தோள்களையுடைய நளனது
தாள் - பாதங்களில்
வீழ்ந்து - விழுந்து,
வடி - வடித்தல்
ஏறு - ஏறிய
கூர் - கூரிய
இலை - அலகு உடைய
வேல் - வேலாயுதத்தைத் தாங்கிய
மன்னுவோ - அரசனே,
உன்தன் - உன்னுடைய
அடியேங்கட்கு- அடியவர்களாகிய எங்களுக்கு
ஆதரவு - ஆசை
தீர - தீரும்படி
கொடி - கொடிகள் கட்டிய
நகரில் - இந்த நகரில்
இன்று - இந்தத்தினம்
இருந்து - தங்கி
நாளை - மறுநாள்
எழுந்தருள்க - செல்வதானல் செல்க'
என்று - என்று
உரைத்தார் - (குடிஜனங்கள்) சொன்னர்.

குறிப்பு :—மன்னுவோ, என்பதிலுள்ள ஓ கார இடைச்சொல் இரக்கப்பொருளில் வந்துளது.

மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமோ வென்று னிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன் மனத்தில் வைத்து. 56.

பதப்பிரிவு:—மன்றல் இள கோதை முகம் நோக்கி மா நகர்வாய் நின்று உருகுவார் கண்ணின் நீர் நோக்கி இன்று இங்கு இருத்துமோ என்றான் இள குதலை வாயாள் வருத்தமோ தன் மனத்தில் வைத்து.

அன்வயம்:-(நளன்) மன்றல் இளங்கோதை முகம் நோக்கி, மாநகர்வாய் நின்று உருகுவார் கண்ணின் நீர் நோக்கி, இளங்குதலை வாயாள் வருத்தமோ தன் மனத்தில் வைத்து, "இன்று இங்கு இருத்துமோ' என்றான்.

பதவுரை.

மன்றல் - வாசனை பொருந்திய
இள - மெல்லிய
கோதை - கூந்தலையுடைய தமயந்தியின்
முகம் - முகத்தை
நோக்கி - பார்த்து,
மா - பெரிய
நகர்வாய் - அந்த மாவிந்தநகரத்தில்
நின்று - எதிர்நின்று
உருகுவார் - மனங்கரைகின்றவர்களுடைய
கண்ணின் - கண்களினது
நீர் - சலத்தை
நோக்கி - பார்த்து,
இள - பிள்ளைத்தன்மையுடைய
குதலை - குதலைமொழிகளால் பேசும்
வாயாள் - வாயை உடைய தமயந்தியின்
வருத்தமோ - வருத்தத்தையே
தன் - தன்னுடைய
மனத்தில் - மனதில்
வைத்து - நினைத்து (நளன்)
" இன்று - இன்றைத் தினம்
இங்கு - இந்நகரில்
இருத்துமோ - (இச்சனங்கள் சொல்கின்றபடி) இருப்போமோ"
என்றான் - என்று தமயந்தியை வினவினான்.

விரிவுரை:-தமயந்தி படுகின்ற துயரத்தைக் காணச் சகியாமலே நளன் ஒருநாள் அங்குத் தங்க நினைத்தான். வருத்தமோ, என்பதிலுள்ள ஒகார இடைச்சொல் ஏகாரத்தைப்போல் பிரிநிலைப்பொருளில் வந்துளது. சனங்கள் கண்ணீர்வடித்து நிற்பதைக்காண வருந்தினானேனும் நளன் தமயந்தியின் துயரிற்கே பரிந்து தானிழந்த நாட்டில் நாளொன்றேனும் நிற்கநினைத்தான். சொன்னது கபடமானாலும் புட்கரன் உரைத்ததற்கு நாம் கொண்ட பொருள்படி, மனைக்குரியாரன்று வரும் துயரம் தீர்ப்பார்.

குறிப்பு:—உருகுவார், என்பது உருகுகின்றவர்கள் என, உருகுதலாகிய வினையைச் செய்கின்றவர்களைக் குறிப்பதால், வினையாலணையும் பெயர்.

வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனுங்
கொண்டாடி னார்தம்மைக் கொல்வமெனத்-தண்டா
முரசறையா யாங்கென்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று. 57.

பதப்பிரிவு:-வண்டு ஆடும் தார் நளனை மா நகரில் யார் ஏனும் கொண்டாடினார்தம்மை கொல்வம் என தண்டா முரசு அறையாய் ஆங்கு என்றான் முன்னே முனிந்து ஆங்கு அரசு அறியா வேந்தன் அழன்று.

கருத்து:—இவ்விதம் சனங்கள் நளனுக்குப் பரிவதைக் கண்ட புட்கரன் கோபங்கொண்டு, "நளனை யாரேனும் கொண்டாடினால் அவர்களைக் கொன்றுவிடுவோம்" என்று பறை அறைவித்தான். அரசாண்டறிந்திருந்தாலல்லவோ இவனுக்குச் சிறிதேனும் பெருந்தன்மை என்பது இருக்கப்போகின்றது.

அறையும் பறையரவங் கேட்டழிந்து நையும்
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்
மன்னகற்றுங் கூரிலைவேன் மன். [தான் 58.

கருத்து:—அவ்வாறு புட்கரன் அறைவித்த பறையின் சப்தத்தைக் கேட்டும், வாடித் தளர்கின்ற தமயந்தியின் அறியாமையைப் பார்த்தும், மனமழிந்த நளன், 'இந்த நகரத்திற்கு இவ்வித அவமானம் என்னாலல்லவோ வந்தது' எனப் பெருந் துக்கத்தால் மருண்டு சிரித்தான்.

தன்வாயின் மென்மொழியே தாங்கினா னேங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான்—முன்னாளில்
பூமகளைப் பாரினொடும் புல்லினான் றன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. 59.

கருத்து:—எப்பொழுதும் தன்வாயில் மென்மொழியே பழகியுள்ள நளன் இப்பொழுதும் புரட்கரனை வன்சொல்லால் ஏதும் வையாமல் தன் புதல்வனையும் புதல்வியையும் அழைத்துக்கொண்டு தமயந்தியோடு அந் நகரைவிட்டுப் போய்விட்டான்.

[சறைந்து
கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முர
வெற்றியோடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றும்
இழவு படுமாபோ லில்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு. 60.

கருத்து:—நகர்விட்டுச் சென்ற நளனைப் பின்தொடர நகரவாசிகள் நினைக்க, அவ்வாறு செல்பவரைக் கொல்வதாகப் புட்கரன் மீண்டும் முரசறைவித்து மிக்க பெருமையோடு அரசிருக்க, அந்நகர் வீடுகள் யாவும் இழவுபட்ட வீடுகள் போலாகிக் குழந்தைகளும் பால்குடிக்காமல் துக்கப்பட்டன.

நெய்தற்கலியுள் ஓர் செய்யுள்

[630-வது பக்கத் தொடர்ச்சி]

மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த உயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் மரம்முதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்;
ஆற்று தலென்பதொன் றலர்ந்தவர்க் குதவுதல்
போற்று தலென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
யறிவெனப் படுவது பேதையார்சொன் னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவதுபோற்றாரைப் பொறுத்தல்;
ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதலி
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் றேரே.

(உரையாசிரியர் உரையைத் தழுவி)

கருமைநிறம் வாய்ந்த மலரையுடைய கழிமுள்ளி என்னும் செடி தில்லை மரத்துடன் சேரச்சூழ்ந்த கானலிடத்துத் திரையிட்ட மணன்மேலே உடன்நின்ற புகழ்மிகுகின்ற தலைமையினையுடைய தக்கணாமூர்த்தி தேவர் தாமிருந்த ஆலமரத்தே தாமிருப்பதற்கு முன்னே தூக்கிவைத்த நீர் நிறைந்த குண்டிகைபோலப் பழந்தூங்கும் முடத்தையுடைய 'தாழைப்பூ' அலர்ந்தவைபோலக் குருகினம் அத் தாழைமேலே தங்கும் துறைவனே, யான் கூறுகின்றதனைக் கேள்.

இல்வாழ்க்கை நடத்துதல் என்று சொல்லப்படுவது வறியவர்க்கு யாதானும் ஒன்றை உதவுதலை. ஒன்றைப்-பாதுகாத்தல் என்று சொல்வது கூடினாரைப் பிரியாதிருத்தலை. மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலகவொழுக்கம் அறிந்து ஒழுகுதலை. அன்பு என்று சொல்லப்படுவது தன் சுற்றத்தைக் கெடாதிருத்தலை.

அறிவு என்று சொல்லப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்தலை. ஒருவரோடு ஒருவர்க்கு உறவு என்று கூறப்படுவது கூறிய தொன்றைத் தாம் மறுதிருத்தலை. நிறை என்று சொல்லப்படுவது மறைந்து ஒரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதலை. முறை என்று சொல்லப்படுவது நமரென்று கண்ணோட்டம் செய்யாது அவர் செய்த குறைக்கேற்ப அவர் உயிரைக்கொள்ளுதலை. பொறை என்று சொல்லப்படுவது பகைவரைக் காலம் வருமளவும் பொறுத்திருத்தலை.

அப்படியே, அக்குணத்தை நீரே அறிந்து ஒழுகினீராயின் அவ் வொழுக்கத்திற்கேற்பது ஒன்று கூறுவேன் ; கொண்க.

என்தோழியது நன்னுதலின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல், இனியதாகிய பாலை யுண்பவர்கள் பாலையுண்டு அதனைக்கொண்டிருக்கும் கலத்தைக்கவிழ்த்துவிடுதல் போல்வதொன்று. ஆகையினாலே, நின்னிடத்து வருந்தினவள் துயரத்தை வரைந்து சென்றனையாய்க் களைவாய். அங்ஙனம் களைதற்கு நின் தேர் புரவியைப் பூண்பதாக.

மாமலர் முண்டகம்—துறைவகேள், என்ற அடிகாறும் இயற்கை வனப்பை இனிதாக எடுத்துரைக்கின்றார், அன்றியும், உள்ளுறைஉவமங் கொள்க என உரையாசிரியர் பின்வருமாறு கூறுவர்:—

"முள்ளுடைய முண்டகமும் கொடிய தில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அலர் கூறுகின்ற மகளிர் சூழ்ந்திருக்கின்றதாகவும், உயிர்க்கொலை சூழும் குருகுகள் நன்றாகிய தாழைமலர்போற்றோன்றுகின்றதனை எம்முயிர்க்கு வருத்தஞ்செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க."

கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தில்தாழைஓங்கிவளருமென்பதும், அத்தாழையினிடத்து ஆலமர் செல்வன் அருங்கையிலுள்ள'கமண்டலம்' போல் பழம் தோன்றுமென்பதும், இரைக்காக அற்றம் நோக்கி அமர்ந்துள்ள குருகினம் அத்தாழைமேல்

வனப்புடன் தோன்றுமென்பதையும் ஓவியமெனக் காட்டுகின்றார்.

இன்னும் இவ்வாசிரியர் பெருமான் இவ்வருமைச் செய்யுளில் பலப்பல உயர்ந்த நீதிகளை இயைபு பற்றி ஓரொரு அடிகளிலே, பொருண் முற்றி விளங்குமாறு அமைத்திருக்கின்ற அழகு அளவிடற் கரியதாகும். இவ்வொழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகும் மக்களுக்கு வேறு ஒழுக்கமும் நீதியும் வேண்டுமோ ?

'ஆற்றுதலென்பது அலர்ந்தவக்குதவுதல்·இவ்வாழ்க்கை நடத்துதலென்று சொல்வது மிடியுடையார்க்கு யாதானுமொன்றை உதவுதலாம். நன்னெறியின்கண்ணே தம்மறிவு முழுதுஞ் செலுத்தி இம்மையிற் பயன்படுகின்ற பொருள்தொகுத்தலின்கண்ணே மனவெழுச்சியில்லாத மூவகை நெறியினர்க்கும், அவர் வேண்டுவன கொடுத்தலே இல்லறத்திற்குத் தலையாய ஒழுகலாறென்பதனை இவ்வடி விளக்கிக் காட்டுகின்றது.

'இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை'

என்றனர், பொதுமறைதந்த பொய்யாப்புலவர்.

போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை ஒன்றைப் பாதுகாத்தலென்று சொல்வது, கூடினோரைப் பிரியாதிருத்தலாம். 'கூடிப்பிரியேல்' என்றனர் நமது பெருங்கிழவி.

பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்—மக்கட்பண்பென்று சொல்லப்படுவது உலகவொழுக்கம் அறிந்து ஒழுகுதலாம். இம் மக்கட்பண்பில்லாதார் மக்களே போன்றிருப்பினும், அறிவிலாதாரென்றும் பேயரென்றும் இகழத்தக்கவ ராவர்.

“உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்”

'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்,—என்றனர், நமது பொதுமறை வகுத்த புலவர்பெருமான்.

'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' எனவரும் ஆன்றோர் வாக்கும், உய்த்துணரற்பாலது.

“அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை”—அன்பென்று சொல்லப்படுவது தன் சுற்றத்தைக் கடியாதிருத்தலாம். “அஃதாவது அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல்,” என்ற உரையாசிரியர் பரிமேலழகர் உரையும், “அன்பெனப்பட்டது தான் வேண்டப்பட்ட பொருளின்கட் டோன்றும் உள்ள நெகிழ்ச்சி' என்ற நற்றமிழ்வல்ல நக்கீரனார் உரையும் இதனை நன்கு வலியுறுத்தும்

“அறிவெனப்படுவதுபேதையார்சொன் னோன்றல்”—அறிவென்று சொல்லப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச்சொல்லும் சொல்லைப் பொறுத்தலாம். தமக்கென ஒன்றிலராகிய பேதைமக்கள் தக்காரைப் பார்த்துத் தகவில்லன கூறியவழி, அத்தக்கார் இவர் செய்கை “திங்களை நாய் குரைத்தற்று” (பழமொழி) என்று கருதிப் பொறுத்திருப்பர். இதை ஆசிரியர் இளங்கோவடிகள் கோவலன் கூற்றாகவைத்து,

நெறியி னீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை யென்றறிதல் வேண்டும்

எனக்கூறுவர். குணம் என்னும் குன்றேறி நின்ற அறவோராகிய கௌந்தியடிகள் தன் சீற்றத்தை அடக்கலாற்றாது, 'முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகென', மொழிவதும்,

நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியாமை யென்றறியல் வேண்டு

மெனக் கூறுவதும் எத்துணை அழகுடன் விளங்கித் திகழ்கின்றன.

'தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்'

என வரூவும் நாலடியார் செய்யுளும் இங்கு நோக்கற்பாலது.

'செறிவெனப் படுவது கூறியது மறாஅமை.'—ஒருவரோ டொருவர்க்கு உறவென்று சொல்லப்படுவது கூறியதொன்றைத் தாம் மறாதிருத்தலாம். “தன்னோடு பயின்றாரைக் கண்டால், அவர் கூறியனமறுக்க மாட்டாமையே கண்ணோட்டமென்று” பரிமேலழகர் கூறுவதும் நோக்குதல் வேண்டும்.

'நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை'—நிறையென்று சொல்லப்படுவது மறைந்ததொரு காரியம் பிறரறியாம லொழுகதலாம். எனவே மறைக்கத்தக்க காரியத்தைப் பிறரறியாது உள்ளத்தடக்கி ஒழுகவேண்டு மென்பதாயிற்று. நிறை—நிறுத்தல். இது மனத்து அடக்கற் பாலனவற்றை வேட்கை மிகுதியான் வாய்விடா தடக்குக, என்பது.

'முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்'—முறையென்று சொல்லப்படுவது நமரென்று கண்ணோட்டஞ் செய்யாது அவர்செய்த குறைக்கேற்ப அவருயிரைக் கொள்ளுதலாம். இது “தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற் பாற்பட், டொழுகப்பெறின்”, என்னும் குறளானும், “பகை, நொதுமல், பென்னும், மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கு நிலைமை' எனக்கூறும் உரையாசியர்உரையானும் உணர்ந்து கொள்ளற்குரியது. ஆசிரியர் இளங்கோவடிகள்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் கடைமணி யுகுநீர்நெஞ்சு சுடத்தான்ற
னரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்.

என, தமிழ்நாட்டு வேந்தனது முறையைப்பற்றி வாயார வாழ்த்துகின்றார்.

பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்-பொறை யென்றுசொல்லப்படுவது, காலம் வருமளவும் பகைவரைப் பொறுத்திருத்தலாம்.

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

“வலி மிகுதியுடைய வரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, சண்டை செய்யும் செம்மறி ஆட்டுக்கிடாத் தன் பகைகெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குந் தன்மைத்து” என்னும் உரையாசிரியர் உரையை இங்கு நோக்குதல் வேண்டும். கொண்க,

மேற்போந்த குணங்களை நீரே யறிந்து ஒழுகினீராயின் அவ்வொழுக்கத்திற்கு ஏற்ப ஒன்று கூறுவல். என் தோழியினது நன்னுதலின் நலத்தை நுகர்ந்து அவளைத்துறத்தல், இனிதாகிய பாலையுண்ணுபவர்கள் பாலையுண்டு அதனைக்கொண்டிருக்குங் கலத்தைக் கவிழ்த்துவிடுவது போலாகும். நின்னிடத்து வருந்தினவள் துயரத்தை வரைந்துசென்றனையாய்க் களைவாய், அங்ஙனம் வரைதற்கு நின்தேர் புரவியைப்பூண்பதாக, எனத் தோழி கூறித் தலைமகனை வரைவுகடாயினாள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவொரு அரும்பெரும் புலவர்பெருமான், உயர்ந்த நீதிகளை, அகப்பொருளமைந்த பாடல்களினால்நமது உள்ளத்தில், பசுமரத்தாணி அறைந்தாற்போல பதிய வைக்கின்ற திறத்தை இச்செய்யுளில் நோக்குமின். இப் புலவர்பெருமான், கூறிய ஒழுகலாறுகளைக் கைக்கொண்டு ஒழுகும் மக்கட்கு வேறு நீதியும் வேண்டுமோ? ஒப்புயர்வில்லா ஒழுகலாற்றையும், ஏனைய உயர்ந்த கொள்கைகளையும் அறிவுறுத்தும் 'கலித்தொகை' என்னும் இந் நூல், தமிழ் மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருத்தல் வேண்டுமன்றோ. கலித்தொகை இல்லா வீட்டை, தமிழ் மக்களின் வீடு என்று கூற வொண்ணாது. காடென்றே கதறுவேன்.

கலித்தொகையைப் படிப்பதற்குப் போதிய கல்வி இல்லையென்று கவல்வானேன்! கல்வி வேண்டுவதில்லை. கலித்தொகையை வாங்கி உங்கள்வீட்டை அழகுபடுத்துங்கள். புத்தகத்தைத் திறக்காவிடினும், நோக்கிக் கொண்டேயிருங்கள். அருமைக் குழந்தைகளும் புத்தகத்தை நோக்கி வளருமல்லவோ ? சில வெண்பொற்காசுகள் கொடுத்தீர்களானால், ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றியாளரான கலித்தொகை ஆசிரியர்கள் உங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருப்பார்கள். உயர்ந்த ஆசிரியர்கள் வந்து நம்மிடைத் தங்கியிருப்பது விண்ணவர்கள் வந்து தங்குவதற்கும் மேலல்லவோ?

இறையனார் அகப்பொருள்

[சில ஐயங்கள்]

தமிழ் அகப்பொருளிலக்கணங்களிலே, மிகச் சீரியதாகவும், தெய்வீகம் பெற்றதாகவும் கருதப்படுவது இறையனார் அகப்பொருள் எனும் நூலேயாம். இஃது அகப்பொருளை விரித்துமுகத்தான் அறுபது சூத்திரங்களைத் தாங்கி இயல்கின்றது. இஃது மற்றை யகப்பொருளிலக்கணங்களினும் மிக்க விழுமியதாகக் கொள்ளப்படுதற்குற்ற காரணம் இஃது இறைவனா னியற்றப்பட்ட தென்பதே யாம். அத்தோடு, மிக்க பல இடர்ப்பாடுகட் கிடையில் தெய்வசம்மதி பெற்றே நக்கீரன் எனும் புலவரான் உரை யியற்றப்பெற்ற தென்பதும் ஒரு காரணமா மென்றுரைப்பர் புலமையோர்.

எமக்கெழுந்த இரண்டு ஐயப்பாடுகளே இக்கட்டுரையை எழுதற்குத் தூண்டிய தென்பதை முதற்கண் தெரித்தல் இன்றியமையா தெனக் கருதுகின்றோம். ஆற்றன் மிக்க தமிழ் வல்லுநர் இவ்வையப்பாடுகளைத் தகும்முறையில் யாரேனும் விளக்கித் தெருட்டுவரேல் யான் என்றுங் கடப்பாடுடையனாவேன்! எனது ஐயப்பாடுகள் கீழ் வருவன :—

(1) “இறையனார் அகப்பொருள்” இறைவனால் இயற்றப்பெற்ற தென்பது உண்மையா?

(2) அவ்விறையனா ரகப்பொருட்கு உரை செய்தார் நக்கீரரேயோ?

இவ்விரு பேரையங்களும் என் மனத்தகத்தே வளர்தற் குற்ற காரணங்களை யான் விளக்கிச் சொல்வேன். இறையனா ரகப்பொருளில், முதலிடை கடைச்சங்கங்களின் வரலாற்றுப்பாலை ஓதிச் செல்லுழி, கடைச்சங்கப் பகுதியின்கண்ணே கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தமை கண்டேம்.

“அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்ல, பசி கடுகுதலும் அரசன் சிட்டரை எல்லாம் கூவி, “வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்” என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர் நாடுமலிய மழைபெய்தது. பெய்த பின்றை, அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, “என்னை, எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்,” எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; “என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்” என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்றுசெப்பித ழகத்தெழுதிப் பீடத்தின்கீ ழிட்டான்.”

ஈங்குக் குறித்த விஷயத்தினின்று நாம் ஆராயக் கிடப்பன.

(1) பாண்டியனாடு வற்கடஞ் சேர்ந்தமையும் அதனான் மன்னன் புலவர்களைப் புரந்தரற்கியலாமை கூறி வேற்றுநாடு மன்னுவித்ததும்.

(2) பிரஸ்தாப காலத்தே, அஃதாவது, கடைச் சங்ககாலத்தே இருந்த புலவர் யாவர்?

(3) அவர்தாம் அகப்பொருளியற்ற ஆற்றலற்றிருந்தனரா ?

(4) தொல்காப்பியமே கடைச்சங்கத்திற்கும் இலக்கண நூலன்றே! அதிற் பொருளதிகாரம் இருப்ப வேறு பொருள் விழைந்த தென்னை ?

என்னும் நான்கையும் நாம் விசாரித்தல் இன்றியமையாத தாம்.

(தொடரும்)

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

காலை விளி

ஆதிப் பகற்கடவுள் ஆரும் திசைவழியே
ஈதே யவன்கரங்கள் ஈட்டுவன மெல்லொளியை;
கோதும் மயிர்போலக் குவிந்திருந்த காரிருளைப்
போதும்எனச்சொல்லிப் போக்கடிப்பான் முன்கிளம்பி;
சோதிப் பிழம்பாகும் சூரியனும் சொர்ணம்போல்
தீதில் தனதொளியைத் திக்கெல்லாம் தோற்றுவித்து
நீதி தவறாது நேரிடுவான் வாரானே ;
வாதில் கழிக்காதே வாராயேல் என்னம்மாய் ! 1.

காலைக் குளிர்காற்று காஞ்சனம்போல் மேனியினைச்
சாலக் களிகூர்ந்து சார்ந்திடுமே எங்கெங்கும் ;
வாலை விரித்திட்டு வான்சிறகை நீட்டசைத்துச்
சோலைப் பறவையினம் சோதித் திரைதேட
மூலை முடுக்கெல்லாம் மோதி இசையுடனே
மேலே பறந்தோடும் மேன்மைதனைக் காணாய் ;
வேலை புரத்தற்கும் வீணாகும் காலமென
ஓலம் இடுவதுவும் உணர்ந்திடுவாய் எந்தோழீ ! 2.

சேவல் பொழுதுணர்ந்து சேணிடத்து மக்களுமே
ஏவல் வருகிறதே என்றுணரக் கூவிடுதே ;
கூவல் குளமெல்லாம் கூவியே யெழுங்குருவி
நாவல் முதல்மரங்கள் நாடிட் டெழுந்தோடும் ;
காவல் புரிநாயும் கட்டுகளை விட்டேகி
ஆவல் அணைந்தெங்கும் ஆடிமிகச் சுற்றிடுமே
நீவந் தெனதுடனே நேரிடுமிவ் வேலைக்குப்
போவ வருவாயே பொன்னனைய என்னம்மாய் ! 3.

பிள்ளையார் கோவிலிலும் பெண்மணிகள் முன்சென்று
மெள்ளவே சாண மெழுகிட்டுக் கூட்டுவரால்;
தள்ளித் தடுமாறும் தாதையரும் தம்மோடு
பள்ளிச் சிறாரும் பணிந்தேத்த உட்சென்று
வெள்ளை அலரியுடன் மெல்லருகும் சிற்றிலையும்
அள்ளி அருச்சித்து அருளடியைப் போற்றிடுவார் ;
கள்ளம் கபடின்றிக் கையால் மணியடித்து
உள்ளம் தெளிந்தகமும் சேர்வதுகாண் எந்தோழீ ! 4.

பொழுதுபுலர்ந்ததுவும்பொன்னொளியானெட்டுவது
மெழுதறியாப் பண்போடியங்குவதும் கீழ்த்திசையில்
முழுதுணர்ந்தபெண்மணிகள்முன்னமெழுந்தீசனையே
தொழுது கதவுதனின் தாழ்ப்பாள் திறந்திட்டார்
மெழுகி வெளிவாயில் மேனீர் தெளித்திட்டு
எழுதி நறுங்கோலம் இட்டுவந்தார் உட்சென்று ;
அழுத குழந்தைக்கே ஆரமுதும் ஊட்டினர்காண் ;
முழுதுமறிந்திலையோ முன்னெழுவாயென்னம்மாய் 5.

கல்விப் பயனறிந்த கற்றோர் அகங்களிலே
செல்வச் சிறுவர்கள் சீருடனே நூலேந்தித்
தொல்லைவித்தையெல்லாம் தொலைதூரம்கேட்கத்தான்
நல்விதமே வாயால் நவில்வதுவும் கேட்டிலையோ ?
கல்வித் துறைதனிலே காரணந்தான் கண்டறியாப்
பல்விதத்து மாக்களுமே பல்லோர் நடமாடும்
நல்விடுதி ஊர்வெளியில் நற்பயன்கள் ஏதுமின்றி
வல்லே கழிப்பதுவும் வாகாண்பாய், எந்தோழீ! 6.

நேற்று மழைபெய்த நீள்நிமித்தம் கண்டறிந்து
காற்று மிகவடித்துக் காய்ந்துவிடாக் காலையிலே
சேற்று நிலமதிலே சேர்ந்துழவும் பண்டங்கள்
தூற்றக் கழியோங்கித் தூய்ஏரை ஓட்டுகின்றான்.
நாற்று நடுவிட்டு நாடெல்லாம் ஊண்எய்த [ளன்
போற்றுந் தொழில்செய்து பொன்பரப்பும் வேளா
சாற்றிப் பறையறையும் சால்பெனவே இந்நேரம்
தோற்ற முடனேகத் தேரிடுவாய் என்னம்மாய் ! 7.

இன்னும் பலவினங்கள் ஏகி வினைமுடிப்பான்
துன்னும் செயலினையும் தேர்ந்துரைத்தல் வேண்டுதி
சின்னம் சிறுமிகளும் சீருடனே செல்கின்றார் [யோ ?
முன்னம் தொழிற்றதவு மூடாமு னுமடைவோம்
கன்னம் சிவந்திடவே காலையிலே வெட்கமுறத்
தன்னம் தனிவெளியில் தான்நிற்றல் அழகல்ல
பின்னும் அதிநேரம் போதுற்றுத் தாழ்ந்திருத்தல்
கொன்னே முடியாதால் கூறுகின்றேன் எந்தோழீ! 8.

ஐயோ இதுகேளாய் அரற்றிவரும் ஓங்குகுழல்,
உய்போம் இதுவிரண்டாம் ஓசையென அறியாயோ !
குய்யோ முறையோ குவிந்தோடும் ஆட்களைக்காண்
கையோன் கதவடைத்தால் காரியந்தான் கெட்டுவிடும்;
செய்யோன் முகட்டினையே சேரளவும் தள்ளிவிட்டு
வெய்ய உலகினிலே வேலையின்றிக் கூழின்றி
நைய வருந்துவதும் நாட்டமுறாய் தாமதமேன்!
பைய உடனெழுந்து பாராயேல் என்னம்மாய்! 9.

எந்தோழீ இன்றுனக்கே எந்நன்றி கூறிடுவேன் ;
வந்தே நீ என்னோடு வாதாடிப் போக்காதே
நொந்திலைசோர்ந்திட்டாய் நோன்பெனவே வேலையைத்
முந்தேகி இன்று முடித்திடுவோம் நம்வேலை. [தான்;
நந்தேகம் சோர்ந்தாலும் நம்வயிறு கூழடையும் ;
செந்தாதும் செம்பூவும் சேர்த்தணிதல் வேண்டாமே
கொந்தாரும் மாலைக்குலக் கடவுளைநாம் தாள்பணிந்து
முந்தோடிச் சேருவமே மோகனத்தெம்நற்றோழீ 10.

2. ஓலம் இடுதல் - விடியற்காலையில் வேலையாட்களை அழைக்கக் குழல் ஊதுதல்

கோவைநகர்ப் பஞ்சாலைத் தொழிலாளர்களில் பெண்பாலார் எண்ணிறந்தோர். இவர் காலையில் வேலைக்குத் திரண்டேகுதலும் மாலையில் மனைநோக்கி மீள்வதும் காண்தகு காட்சியாம். அன்னார் ஒருவரையொருவர் கூவியழைத்துக்கொண் டேகுந் தன்மையினைக் குறிக்கின்ற இச்செய்யுள்கள் திருவெம்பாவையின்யாப்பினை ஒட்டிப்பாடப்பெற்றிருக்கின்றன.

இம்பெண்கள் மீளுங்கால் உரைக்கின்ற "மாலைவிளி" அடுத்த இதழில் வரும்.

திருக்குறள் நீதி

I. பாயிரம்

1. கடவுள் வாழ்த்து

1. ஆதி பகவன் முதற்றுய திவ்வுலகு
2. முற்றறி வனைத்தொழார் கற்றத னலென்
3. அத்த னடியார் வித்தக ராவர்
4. இடும்பை சேரா திறைவனை வழிபட
5. ஈச னடிதொழ விருவினை சேரா
6. நீடூழி வாழ நிமலன் நெறிநில்
7. அண்ணல்தாள் நண்ணிற் கழலுங்காண் கவலை
8. இறைவனைப் போற்றிப் பிறவியை யறுப்பாய்
9. தலைவனை வணங்காத் தலைபய னிலதே
10. பிறவியை யகற்றப் பானடி பரவுக

2. வான் சிறப்பு

1. பூமிக் கமிழ்தம் பொழிபுன லாகும்
2. உணவுக ளெல்லாம் உறையே யாகும்
3. வாரி யின்றேல் வருத்தும் பெரும்பசி
4. மாரி யின்றே லேருழா ருழவர்
5. காப்பதுங் கெடுப்பதும் புரிவது மழையே
6. விசும்பிற் றுளியற்றால் பசும்புற் றலையில
7. ஆல மின்றே ளாழிவளங் குன்றும்
8. புட்கரம் பொய்க்கின் பூசனை யில்லை
9. வானம் வறண்டாற் றானந் தவமிலை
10. மாரி யல்லது காரிய மில்லை

3. நீத்தார் பெருமை

1. நீத்தார் பெருமை சாற்றவும் பெரிதே
2. துறந்தார்க் குவமை சொல்ல லரிது
3. நெறியறம் பூண்டார் பெருமையோ பெரிது
4. ஐம்புலன் வென்றவ னரும்பெரி யோனும்
5. ஐம்பொறி வென்று ராற்றற் களவிலை.
6. அருஞ்செயல் முயல்வோர் பெரியோ ராவர்
7. பொறியைந்தின் வகைகண்டார் நெறிநிற்கு முலகு
8. துறந்தா ரெண்கை நிறைந்தசொற் காட்டும்
9. வித்தகர் வெகுளி வீண்போ காது
10. அன்புடை யவரே யந்தண ராவார்

4. அறன்வலி யுறுத்தல்

1. சிறப்புஞ் செல்வமும் அறத்தான் வருமே
2. அறனை மறந்தா ராக்கந் துறந்தார்
3. இயல்வது கரவா தறஞ்செ யென்றான்றும்
4. மாசற் றிருத்தலே ஆசித்த நல்லறம்
5. அழுக்கா றவா அறுப்பது நல்லறம்
6. இயன்ற தின்னேசெயின் பயன்றரும் பின்னே
7. அறத்தி னாற்றல் சிறப்பினை யீனும்
8. ஓயா தறஞ்செய்வாள் தோயான் பிறவாழி
9. அறச்செயற் கின்பம்போற் பிறசெயற் கில்லை
10. தீவினை யகற்றி மேல்வினை செய்க.

199147

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[609-வது பக்கத் தொடர்ச்சி]

(8) சையோகம்—இது சையுக்த விவகாரத்தின் ஏது. இது இரண்டு திரவியங்களி லிருப்பது. மற்றும் வியாபியாமலு மிருப்பது.

இது, வேறு வினையாற்றோன்றியன என்பன, இரண்டன்வினையாற் றோன்றுவன என்பன, சையோகத்தால் தோன்றியனவென்பன, ஆக மூவகைச் சையோகங்களாம். இவையன்றியும், சகஜசையோகம் நித்தியசையோகம் என இருவகையிலும் கூறுவர். பொன்னில் மஞ்சள்நிறம் சகஜ (இயல்பான) சையோகம்.

> மையார் மலர்க்கண்ணாள் பாகர் போலும்
> மணிநீல கண்ட முடையார் போலும்
> நெய்யார் திரிசூலங் கையர் போலும்
> நீறேறு தோளெட் டுடையார் போலும்
> வையார் மழுவாட் படையார் போலும்
> வளர்ஞாயி றன்ன வொளியார் போலும்
> ஐவா யரவமொன் றார்த்தார் போலும்
> ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே

திருஆக்கூர்த் தான்றோன்றிமாடத் திருத்தாண்டகம் 3.

செம்பிற்கும் களிம்பிற்கும் உள்ள சம்பந்தமும் சகஜசையோகமே.

வியாபகப் பொருள்இரண்டற்கு உள்ள சம்பந்தம் நித்தியமாயிருத்தலின், அது நித்திய சையோகமென மீமாஞ்சகர் கூறுவார். ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா என்பன நித்திய திரவியமாயிருத்தலின் இவற்றின் பரஸ்பர சம்பந்தம் நித்திய சையோகமாம்.

வேறுவினையாற் றோன்றும் சையோகத்தை அந்நியதா கர்மஜ சையோகமென்று கூறுவார். ஒரு பருந்து ஓடும் வினையில் ஒரு மரக்கிளைக்கு உண்டாகும் சையோகம். மரக்கொக்கு என்பது அப்பர் தரும் வேறு உதாரணமாம்:—

> பரக்கோக் காமென வாய்விட் டலறிநீர்
> சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
> பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
> குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே.

திருக்குரக்குக்கா - திருக்குறுந்தொகை 1.

இரண்டன் வினையாற் றோன்றுவது, வினையுடையமல்லரது சையோகம் போல்வது. இதை உபய கர்மஜ சையோக மென்பர். இரண்டு (நிராயுதரான) மல்லர்களின் தொழிலால் அவ்விருவர்க்குமுண்டாகும் சையோகம் உபயகர்மஜசையோகம். ஈண்டு இச்சையோகத்திற்கு இரண்டு மல்லர்களும் சமவாயி காரணமாவார். அவர்களின் வினை அசமவாயி காரணமாம். இதற்கு அப்பர் தேவாரத்தில் காணக்கூடிய உதாரணம், சிவபெருமான் காலனைக் காலால் உதைத்தது முதலியன:-

M211,N28 IC.N

காலனைக்கா லாற்காய்ந்த கடவு டன்னைக்
காரோணங் கழிப்பாலை மேபான் றன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன் றீந்தான் றன்னைப்
பணியுகந்த வடியார்கட் கினியான் றன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலட் டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீன்ற
ஆலவனை யரநெறியி லப்பன் றன்னை
யடைந்தடியே னருவினைநோயறுத்தவாறே
திருவாரூரரநெறி - திருத்தாண்டகம் 8.

யாண்டுச் சையோகத்தாற் சையோகமுண்டாகிறதோ ஆண்டு அது சையோகஜ சையோகமெனப்படும். கைக்கும் விருக்ஷத்திற்கும் சையோகமுண்டாயின், மெய்க்கும் அவ்விருக்ஷத்திற்கும் உண்டாகும் சையோகம் சையோகத்தாலுண்டாகும் சையோகம். சிவனடியார்களுடன் சையோகம் சிவசையோகமாம். கைலாயத்தைத் தூக்கி நசுங்குண்ட இராவணனுக்கும் சிவபெருமானுக்கும் கைலைமலைபால் உண்டான சையோகம் சையோகஜ சையோகமே.

(9) விபாகம்:—அதாவது பிரிவு வியவகார ஏது. இதற்கு முதலாய் நிற்பது சையோகம். அச் சையோகத்திற்கு இரண்டன்கண் இருப்பது. அதுவேறுவினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற் றோன்றியது, விபாகத்தாற் றோன்றியது என மூவகை. சையோகம் நாசமாகுங்காலத்தில் இதுதோன்றுவதால், சையோகம் போலவே விபாகமும் அந்நியதர கர்மஜம் * உபயகர்மஜம், விபாகஜம் என மூவகையில் ஏற்படும். அவைகளைப் பின்வரும் தேவார உதாரணங்களாலறியலாம். வேறுவினையாற் றோன்றும் † அந்நிபதா கர்மஜம் என்பது பூவிலிருந்து வண்டு ஓடிப்போதல்:—

வண்டிரிய விண்டமலர் மல்குசடை தாழவிடையேறிட்
பண்டெரிகைக் கொண்டபர மன்பதிய தென்பரதனயலே
நண்டிரிய நாரையிரை தேரவரை மேலருவி முத்தம்
தெண்டிரைகண் மோதவிரி போதுகமழுந்திருநலூமே
—சம்பந்தர்

இரண்டன் வினையாற் றோன்றிய விபாகமாகிய உடயகர்மஜம் என்பதற்கு உதாரணம், தக்கன் வேள்வி தகர்த்தஞான்று * கூட்டங்கூடிய தேவர்கள் ஓடிப்போதல்.

இந்திரன் பிரமனங்கி யெண்வகை வசுக்களோடு
மந்திர மறையதோதி வானவர் வணங்கி வாழ்த்தத்
தந்திர மறியாத்தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று
சந்திரற் கருள்செய் தாரும் சாய்க்காடு மேவினாரே
திருச்சாய்க்காடு - திருநேரிசை .. 5.

மற்றும் எறும்பிடையோர் புழுநெளிதலும் இதன்பாற் படும்:—

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னலரிப் புண்டலந்த
வெறுந்தமியேனை விடுதிகண்டாய் வெய்யகூற்றொடுங்க
உறுங்கடிப்போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே
திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம் 25.

விபாகத்தாற் றோன்றும் விபாகம்:—

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரைசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.
திருவாசகம்.

விபாகம் என்னும் குணம், சங்கியை பரிமாணம் பிரதத்துவம், சையோகம் என்னும் குணங்கள்போல் சர்வத் திரவியங்களிலு மிருப்பதாகும்.

* மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றா ரமரரெல்லாங்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டலரக் கடல்வீழ்ந்த
என்னே ரனையே னினியுன்னைக்
கூடும் வண்ண மியம்பாயே. —திருவாசகம்

† பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த வன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொறுவின் னிரையோடு
மாமாம் பிணைவந் தணையும் சார
லண்ணா மலையாரே —சம்பந்தர்

* பாற்கடலைக் கடைந்தபோது அங்குக் கூடிய வானவரும் தானவரும் ஆங்கெழுந்த காளவிஷம் கண்டு ஓடியதும் இவ்வகையதே:—

வடங்கெழு மலைமத் தாக வானவ ரசுர ரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சங் கண்டுபஃ றேவ ரஞ்சி
அடைந்துநுஞ் சரண மென்ன வருள்பெரி துடையராகித்
தடங்கட னஞ்ச முண்டார் சாய்க்காடு மேவி னாரே
திருச்சாய்க்காடு - திருநேரிசை 2.

வொர்ட்ஸ்வொர்த்

William Wordsworth

[614-வது பக்கத் தொடர்ச்சி]

வானம்பாடி

ஆகாயத்தில் பாடிக்கொண்டே யாத்திரை செய்யும் சங்கீத் ஞானியே! கவலைகள் நிறைந்துள்ள இவ்வுலகத்தை நீ அலக்ஷியஞ் செய்கின்றனைபோலும். உனது இறக்கைகளினால் நீ ஆகாயத்தில் பறக்கும்போது, உன் உள்ளமும் கண்களும் பனித்துளிகள் நிறைந்த பூமியின்மேலுள்ள உனது கூண்டையே நாடுகின்றன. அசையுந் தகைமைத்தாய உனது கூண்டை உன் மனம்போல நீ சமைத்துவிடுகின்றாய். நிசப்தமான ஆகாயத்தில் உனது இனிய கீதம் நிரம்பியிருக்கிறது. நைடிங்கேல் என்ற பக்ஷி பாடும் இடங்கள் நிழல் பொருந்திய வனங்கள். ஆனால், பிரகாசமும் ஒளியும் பொருந்திய ஆகாயமாகிய இடம் உனதே. ஆண்டிருந்து நீ இப்பூவுலகின்மீது பொழிகின்ற சங்கீத வெள்ளத்தில் உலகத்தினர் திளைக்கின்றனர். மிகுந்த தெய்வீக உணர்ச்சி நிரம்பியது இவ்வெள்ளம். அறிஞர்கள் மகோன்னதமான தெய்வீக நிலைகளுக்கு உயர்கின்றபோதிலும் அவ்வுயரங்களில் அவர்கள் வினைக உலாவவில்லை. ஆகாயம் பூமி ஆகிய இவ்விருவிடங்களிலும் ஓரே பந்தத்துவம், அல்லது ஓரேதன்மையான ஆன்

மாவே நிறைந்துள்ளது; பரந்த இவ்வான்ம உணர்ச்சியைஅறிந்து, அதை ஓட்டியும், அதற்கு உண்மையாகவும் நடக்கின்றனர் அறிஞர்கள்.

ஷேல்லியும், ஓர்ட்ஸ் வோர்த்தும் - ஷெல்லி தனது வானம்பாடியில், 'வானம் பாடியே! பூமியை நீ உதாசீனஞ் செய்கிறாய்; நீ எனக்கு உனது சந்தோஷத்திற் பாதியளவாவது தருவாயாக' எனக் கூறுகின்றார். ஓர்ட்ஸ்வொர்த்தின் கூற்றை ஈண்டு நோக்குவாம். "கவலைகள் நிரம்பிய இவ்வுலகத்தைநீ அலக்ஷியஞ்செய்கின்றனை" என்கின்றார் ஓர்ட்ஸ்வொர்த். மேலும் சிறப்பாக, வானம்பாடியை முன்வைத்துப் பாடிய பாட்டில் "வானத்திலும் பூமியிலும் அந்தர்யாமியாய் இருக்கும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை அறிந்து, அதை ஓட்டித் தமது வாழ்க்கையைச் சான்றோர் நடாத்துகின்றனர்" என்று இயம்புகின்றார் ஓர்ட்ஸ்வொர்த். ஷெல்லியோ "ஒருகவி தனது எண்ணங்களாகிய ஒளியில் ஆழ்ந்து லோகோபகாரமாகக் கவிகள் சமைக்கின்றான்" என்று கூறியுள்ளது ஈண்டு உய்த்துணரற் பாலது. எனவே ஆன்ம உணர்ச்சியைப் பற்றியும் (Spiritual Consciousness or Universal Consciousness), அறிவு உணர்ச்சியைப்பற்றியும்(Intellectual Consciousness) தமது கவிகளின்வாயிலாக முறையே ஓர்ட்ஸ்வொர்த் ஷெல்லி என்ற இருகவிஞர்களும்வலியுறுத்துகின்றனர். ஆன்மநிலைகளை எய்திக்கொண்டிருந்தபோதிலும், யோகிகளும் ஞானிகளும் வானம்பாடியைப்போல, தங்கள் கண்ணையும் கருத்தையும்தங்கள் இல்லங்களைப்பற்றிய விஷயங்களில் செலுத்துகின்றனர் என்று தெள்ளிதின் அறிவுறுத்துகின்றார் ஓர்ட்ஸ்வொர்த். ஸ்ரீராமகிருஷ்ணரும் தனது உபதேசமாலையில் 'கழைக்கூத்தன் ஒருவன் எவ்வாறு தனது கைகளால் ஒரு கழியைப் பிடித்துக்கொண்டு, பல திக்குக்களிலும் விளையாடுகிறானோ, அஃதேபோல் ஒருஞானி தனது மனதைமட்டும் கடவுள்பால் பதியவைத்து, தனது இல்லத்துக்குரிய காரியங்களில் புகுகிறான்" எனப் போதித்துள்ளார். இது சீரிய ஞானிகளின் நேரிய இலக்கணம்.

பொதிகை நிகண்டு

[633-வது பக்கத் தொடர்ச்சி]

நாலாவது-மரப்பெயர்த் தொகுதி

சந்தான தருவுமரி சந்தனமும் பாரி
சாதமுமந் தாரமுங்கற் பகமுமெனத் தருவோ
ரைந்தாகு மலயசஞ்சந் தாரமே சந்த
மாகுதிதண் வாசிலே பனம்பூசல் சாந்தம்
* பந்தான சாந்தொடுசந் திரதிலகஞ் சாத்துப்
† படிவிரைப டீரமுஞ்சந் தனமரப்பேர் ‡பிசினங்
கந்தார்செஞ் சந்தனமா மகிலகருப் பூழிற்
காகதுண்ட மாந்துருக்க மரவமுங்குங் குமமே. 150.

குமைதுருமோற்§பலங்குயரு பிணிகன்னி காரங்
கோங்கின்பேர் பிணருமாம் வகுளங்கே சரத்தோ
டமையிலஞ்சி மகிழ்மரப்பேர் பாடலம்புன் காலி
யவையிரண்டும் பாதிரியாஞ் சண்பகஞ்செண் பகமாங்
கமழ்சிறுசெண் பகஞ்சாதி மாலதியென் றிரண்டாங்
கருமுகைபித் திகையாகுந் திலகமஞ்சா டியதாம்
சமிகலிச நெருப்புவன்னி குலிசமுமா மனிச்சந்
தருப்பலம்புன் காலியாங் குருந்துகுந்த மாமே. 151.

ஆமலக நெல்லியின்பேர் கடுவேபத் தியமு
மரிதகியு மாந்தான்றி கலித்துரும மாகுங்
காமரம்வா ஞேங்கிபழு மரநியக்கு ரோதங்
காணுநெடு வீழிவடந் தொன்மரமே கோளி
யேமுறுமா லம்பூத மாலின்பேர் பத்தா
மிறலிசுவி$யிரத்தியிந்தி ரியுமித்திப் பேராந்
தேமரசு சுவலைசரா சனமச்சு வத்தந்
திருமரம்பிப் பிலம்போதி கணைபணவ மதற்கே. 152.

அதமதவு கோளியுதும் பரமத்தி நான்கா
மாரமார் சல்லதிதா தகியாத்தி நான்காம்
இதழியாக் குபதந்தா மங்கடுக்கை மதலை
இணர்ப்பாசு பதமாறும் கொன்றையின்பே ராகும்
வதரிகோற் கொடிகோல்குல் வலியிரந்தை யாகு
மற்றிரந்தைக் கனிகோலங் கொண்டையென லாகுங்
கதகமே சில்லமில்லந் தேறுகும் பூவை
காசையச்சி யஞ்சனிநாற் பெயர்காயா மரமே. 153.

மருதின்பே ரருச்சுனமும் பூதலமு மாகும்
வாசந்தி குருக்கத்தி நாகரிமா தவிப்பேர்
குருகதிமுத் தகமுமாம் ¶வைதேகி பனசங்
கூழையா சினிசக்கை வருக்கைநத்தை பாகல்
தருபலாப் பலவின்பேர் நேரோடு நாவல்
சம்புநவ்வ லாங்குழிநா வற்பேர்சா தவமா
முருகருணஞ் சம்பிரமம் புலிலிகுசம் ராச
மோகிசத பலமெனுமிச் சேழ்பேர்சொன் னாரே. 154.

நாரநா ரங்கநா ரத்தையே நரந்த
நாரனுமாம் வாசைப்பேர் பாண்டில்சீ ரிடமாம்
பூரணிசன் மலிபொங்க ரிலவின்பேர் தாளி
புற்பதிபட் டிகைகள்ளன் போந்துபுல்லு நெடுவை
காரிகரும் புறந்தாலந் தாழிபெண்ணை §பனைபூ
*கதஞ்சகுந்தங் கந்திபூகம்பூக்கங் கமுகாஞ்
சாரிலாங் கலிதென்னை தென்னுளி கேரந்
தாழைதெங்காம் பன்னடை நாரியுநெய் யரியே. 155.

அரியதுவர்க் காய்கோலம் பிளகுபாகு டன்பாக்
கடைக்காயாந் தேக்கின்பேர் சாகமா மழிசில்
பொரியரைசெம் மரஞ்சேயங் கோலமழிஞ் சிலுமாம்
புன்னாக நாகம்வழை சுரபுன்னைப் பேராம்
பிரசாரந்†திமிசுதிமில் கணியசனம் வேங்கைப்
பேராகுங் கோவிதா ரங்குரா மரப்பேர்
சுரதாருத் தேவதா ரத்தின்பேர் நறவஞ்
சுள்ளிமராப் பணைகணவஞ் சாலமர மாமே. 156

ஆம்பிரஞ்சே கரமாழை மாந்திகொக்குச் சூத
மாறுந்தே மாவின்பே ரெகின்மாழை கிஞ்சந்

* பிந்தாத (பி-ம்)
† பேசும (பி-ம்)
‡ பிசனங் (பி-ம்)
§ பலங்குயரு பிணிகன்னி (பி-ம்)
$ யிரத்தி யிரந்தி (பி-ம்)

¶ வைதேசி (பி-ம்)
§ பனைப்பேர் (பி-ம்)
* கந்தி பூத்தம் பூக்கம் பூகமுமே கமுகாஞ் (பி-ம்)
† திமிசு தியல் (பி-ம்)

தேம்பியவாம் பிரம்புளிமா வின்பேராம் பிரமே
சிந்தூரம்பூ கினியெகினஞ் சிந்தகந்திந் திருணி
காம்புளி மரத்தின்பே ராஞ்செயலை பிண்டி
காகோளி யாயிலும சோகமர மாகும்
வேம்புபிசி தம்பாரி பத்திரம்வா தாரி
மேவுபிசு மந்தநிம்ப மாமெனுமிவ் வுலகே. 157.

உலவைமர மோடையாம் வேல்குடையு முடையா
முடப்பையுடு வைப்பேர்கா திரங்கருங்கா லிப்பேர்
கலிசிறுமா ரோடமே செங்கருங்கா லிப்பேர்
களங்களாங் களவின்பேர் வெள்ளில்விளாங் கபித்தம்
பொலிவிளாக் கடிப்பகையும் விளவின்பேர் காஞ்சம்
புன்கின்பே ராகுங்காஞ் சனந்தமா லமுமாம்
பலசொடுப லாசுபுன முருக்காமுண் முருக்கே
பருங்கவிர்கிஞ் சுகமாகு யாச்சாப்பே ராவே. 158.

ஆவலுறு குறிஞ்சிகுர வகமேக வன்னி
யலர்ப்பாணம் சகசரிகோ ரண்டமலைக் கருவா
மேவுகொட்டங் குரவாகுங் கிரிமல்லி குடசம்
வெட்பாலை யாநுணவை தணக்காமா லூமங்
கூவிளைநின் மலதாருச் சிவதருவே வில்வங்
கூவிளமு மாங்கடம்பல் கூம்பல்குமிழ் மரப்பேர்
எவுகொட்டங் குடிலமே குரவமரப் பேரா
மிருப்பைமது கங்குலிக மிலுப்பையெனக் கிளத்தே.

கிளையமைமுர் தூழ்வேணுத் தூம்புவெதிர் வேரல்
கீசகம்வே லாம்பலரி பாண்டிலம்பு திரிகண்
கழைபணையா திரிவிண்டு முடங்கல்சந்தி நேமி
காம்புவரை புறக்காழ்கண் கணை திகிரி யோங்கன்
மூளைதுளைவேய் வேழந்தே சனமுப்பான்மூன்று
மூங்கிலின்பேர் காளங்கோ டரமெட்டி மாணி
திளையுங்காஞ் சுரைப்பேராம் பஞ்சரஞ்செங் கோடு
செருந்திப்பே ரகத்தியின்பேர் கரீரமச்சமுனியே. 160.

முனைமரா மிந்தளய்வி சாலமொடு கதம்ப
முகைநீபங் கடம்பாஞ்சின் தூரஞ்செச்சை சிந்தம்
பனிகுல்லை சேதாரம் வெட்சியாம் பானு
பத்தமுச்சித் திலதஞ்சூ ரியகாந்த மாகு
இனியகரு முளங்கழுமா துளங்கந்தா டிமமோ
டெழுவேதா திமமேமா துளையேழ்மா தளைப்பேர்
கனிமடிபட் டிகைபறிவை முடங்கல்கண்டன் முசலி
கைதைகே தகைமுடவி முண்டகந்தா ழையதே. 161.

அதிமதுர மதுகமட்டி யதிங்கமுமா நீலி
யவுரியா நறவிலிப்பே ரலியாங்கோத் திரிகை
மதுரசமுர் திரிகையாம் வானீரம் புள்ளி
வஞ்சுளமும் வஞ்சியின்பேர் முழிஞ்சில்முன்னை யாகுங்
கதலியிலை மரநவிரை திரணபதி செகுலி
காயரம்பை வாழைமரு கேமகர வாழை
விதயாகும் செம்மரத்தஞ் சிவமந்தா ரமுமாம்
விருந்தம்வனங் குல்லைதுழாய் துளசிதுள வினுக்கே.

துளிரும்வலம் புரிநந்தி யாவட்ட மாகுந்
துடியாஞ்சி யேலமதாம் புனமுருங்கை புன்காந்
தளவுமா கநிமவ்வ லூநிகைகற் பைந்துந்
தளிர்த்தமுல்லைப் பேருழிஞை சிறுபூளை யாகுங்
குளிர்குளவி பனிச்சைமலைப் பச்சையா மிசங்கு
குண்டலிமுத் தாம்பலுமாம் பானுவருக் கெருக்கா
மளிபயிலும் பலினிஞா ழலின்பேர்பா லிகையே
யடம்பாகுஞ் சித்திரமே ரண்டமா மணக்கே. 163.

மணத்தமா லதிமவ்வல் புருணமனங் கமுமே
மல்லிகைப்பேர்‡புட்டில்பசு நாய்ப்பிராய் புக்காங்
கணப்பீரம் வச்சிரமா விருட்சம்வச் சிராங்கம்
கள்ளிபின்பே ரிந்திரகு ரியஞ்சிந்து வாரந்
துணுக்குறுசிர்க் குண்டிநொச்சிப் பேராந்து ரோணந்
தும்பையாங்§குருஞ்சனஞ்சிற் குருமுருங்கை யாகுங்
குணத்துடிகூ தாளங்கூ தாளிகூ தளமாங்
கோநிகோ தும்பையதாம் பாயசம்பாற்சொறியே.164.

சொறிமூலி கண்டுரங்காஞ் சொறியாகு மத்தந்
தூர்த்தூர மதுமத்த மருணமத்து மத்தா
நறுமருப்பாத் திரகமல்ல மிஞ்சியாந் தேறு
நன்னிசிபீ தகங்கதலி யரிசனங்காஞ் சனியே
செறிமஞ்சட் பேர்சுண்டி¶வேர்க்கொம்பு சுக்காந்
திட்சண மரீசங்கோ ளகந்திரங்கல் கமறி
கறிமிரியல் கலினைகா யமூமிளகாம் பத்தல்
காசைகொறுக் கச்சிசர வணஞ்சரநா ணலுமே. 156.

நாணியமா கநிகலினி பிப்பிலியே செற்ப
நாசினிகா மன்கடுகி திப்பிலிப்பே ராரும்
பூணுபசும் பிடிதகரம் பச்சிலை தமாலம்
புல்லகண்டம் கழைவேழ மிக்கிரச தாளி
வேணுவொடு கன்னலா லையுங்கரும்பென் றுரும்
வேரிவசு வாசிபீ தகமூல கந்தங்
காணுவிரை மூலமிரு வேலிப்பேர் கவிரங்
கணவீரங் கரவீர மலரியின்பேர் மரபே. 166

மருக்கொழுந்து தமனகமா மிருவாட்சி யனங்க
மயிலையுமாங் குல்லைகஞ்சம் பங்கிகஞ்சா வாகு
பருத்தியின்பேர் காற்பாசம் பன்னலும்பஞ்சியு மாம்
பகன்றிகிலு கிலுப்பையின்பேர் குன்றிகுஞ்ச மாகும்
மிருக்கரிகத் தரிவங்கம் வழுதிலையின் பேரா
மிதற்குவழு துணையுமாங் காரவல்லி கூரம்
விரைத்தபா கலின்பேர்கக் கரிப்பேர்வா லுந்தி
வெள்ளரிப்பே ருருவாரம் வெள்ளைநா ளிகமே. 167.

‡ விட்டில் பசு (பி-ம்)
§ குருஞ்சினஞ்சிக் (பி-ம்)
¶ வேற்கொம்பு (பி-ம்)

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[534-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 3.

இடம்:—ப்ரூட்டஸின் கூடாரம்
ப்ரூட்டஸும் காஸ்ஸியஸும் வருகின்றனர்.

காஸ்ஸியஸ்:—பிழை எனக்கு நீ இழைத்தாய் என்பது இதனில் தெரிகின்றது—இங்குச் சார்டீனியர் இடமிருந்து இலஞ்சம் வாங்கியதற்காக லூஸியஸ் பேல்லாவிற்குத் தண்டனை விதித்துக் குறித்துக்
கொண்டுவிட்டனை. அவனை நான் அறிவேனாதலின் இவ்விடயத்தில் அவன்பொருட்டு யான்வேண்டிக் கொண்டெழுதியகடிதங்கள்புறக்கணிக்கலாயின (1)

ப்ரூட்டஸ்:—இத்தகையவோர் விடயத்தில் எழுதியதால் உனக்கு நீயே பிழை இழைத்துக்கொண்டனை. (2)

காஸ்ஸியஸ்:—இத்தகைய வோர் காலத்தில், நுண்ணிய குற்றம் ஒவ்வொன்றும் அதன் விளக்கத்தைச் சுமக்கவேண்டுமென்பது தகுதியல்லவே. (3)

ப்ரூட்டஸ்:—ஒன்றனக்குச் சொல்கின்றேன் கேள், காஸ்ஸியஸ்; அரிக்கின்ற அகங்கை யுடையனென்று நீயே மிகவுங் கண்டிக்கப்படுகின்றாய். உன் வயம் இருக்கும் உத்தியோகங்களைக் கடைபரப்பித் தகுதியற்றவர்களுக்குப் பொன்னிற்கு விற்கவா! (4)

காஸ்ஸியஸ்:—நானா! அரிக்கின்ற அகங்கையா! (5) இவ்வண்ணம் பேசுகின்றவன் ப்ரூட்டஸ் என்பதை அறிவாய் நீ. இல்லையேல், தெய்வங்கள் மீதாணை, மற்றிதுவே உன் இறுதி வாசகம். (6)

ப்ரூட்டஸ்:—காஸ்ஸியஸ் என்னும் பெயர் இந்த இலஞ்சத்தைக் கௌரவப்படுத்த, அதனால், தண்டனையுந் தன் தலையை மறைத்துக்கொள்கின்றது. (7)

காஸ்ஸியஸ்:—தண்டனையா!

ப்ரூட்டஸ்:—நினைப்பாய் மார்ச்சினை, மார்ச்சின் மத்தியை நினைப்பாய்! (8). மாகா ஜூலியஸ், நீதியின் பொருட்டு இரத்தம் வடிக்கவில்லையா? குத்தினவர்களில், நீதிக்காக வன்றி அவன் உடலைத் தீண்டிய கயவன் யாவன்? (9) என்னிது! கள்வருக்குக் கைதந்தானென்றே, (10) உலகிற்கெல்லாம் முதன்மையாய் நின்றவனைக் கொன்ற நம்மிலொருவன், இப்பொழுது அற்ப இலஞ்சத்தால் நம் விரல்களை அழுக்காக்கி, பெரிய நம் கவுரவத்தின் அகலிடத்தை, இவ்வளவிற் பற்றக்கூடிய வெறுஞ்செத்தைக்கு மாறாக விற்கலாமோ (11)? இப்படி யோர் உரோமனா யிருப்பதைக்காட்டிலும் நானோர் நாயாகிச் சந்திரனைப்பார்த்துக் குலைத்தலே மேல்.

காஸ்ஸியஸ்:—ப்ரூட்டஸ், என்னைப்பார்த்துக் குலைக்காதே—நானதனைப் பொறுக்கமாட்டேன். உன்னையே மறந்து நீ என்னை இன்னணம் நெருக்குகின்றாய். நானோர் போர்வீரன்; நான் பயிற்சியிற் பழையவன்; நிபந்தனைகள் செய்துகொள்ள நின்னினும் வல்லவன். (12)

ப்ரூட்டஸ்:—சீ போ! நீ அல்லன், காஸ்ஸியஸ்.

காஸ்ஸியஸ்:—வல்லனே யான்.

பரூட்டஸ்:—அல்லன் நீ என்கின்றேன் நான்.

காஸ்ஸியஸ்:—இதன்மேலும் என்னைத் தூண்டாதே. என்னையே நான் மறந்துவிடுவேன். உன் உயிரின் மீது நினைவிருக்கட்டும். இதன்மேல் என்னைச் சோதிக்காதே.

ப்ரூட்டஸ்:—செ, போ! அற்பப் பயலே!

காஸ்ஸியஸ்:—இப்படியும் முடியுமா! (13)

ப்ரூட்டஸ்:—யான் கழறுவன கேள். உன் மூர்க்கக் கோபத்திற்கு நான் வழியும் இடமும் விடவேண்டுமோ? பித்தனொருவன் வெறித்து நோக்கினால் யான் வெருவிவிடுவேனோ?

காஸ்ஸியஸ்:—ஓ தெய்வங்காள், தெய்வங்காள்! இவைகளை எல்லாம் நான் பொறுத்திருக்க வேண்டுமோ?

ப்ரூட்டஸிற்கும் காஸ்ஸியஸிற்கும் இடையே மனவேறுபாடு உண்டாயிருப்பதை 3 ம் களம் குறித்தது. அதுபற்றி இக்களத்தில் தனியே கூடாரத்திற்குள்ளிருந்து இருவரும் உரையாடுகின்றனர். மானுட இயற்கையின் நுண்மைகளை எல்லாம் தெள்ளிதின் எடுத்துக் கண்ணாடிபோற் காட்டும் இக்களம் ஊன்றிக் கற்று ஆராய்ந்து அவரவர் அநுபவங்களோடு ஒப்புநோக்கி உணர்தற்குரியது.

(1) ப்ரூட்டஸின்பால் காஸ்ஸியஸ் கண்டபிழை இது—லூஸியஸ் பெல்லா என்பன் இலஞ்சம் வாங்கியதற்காக நீ அவனுக்குத் தண்டனை விதித்தாய். அவனைநான் அறிவேன். ஆகையால் அத்தண்டனையை மாற்றிவிடும்படி உனக்குயான் கடிதங்கள் எழுதி வேண்டினேன். நீயோ அக்கடிதங்களை அலக்ஷியஞ்செய்துவிட்டாய். என் வேண்டுகோளை மதிக்காமல் தள்ளிவிட்டதால் நீ எனக்குப் பெரும்பிழை இழைத்தவனாகின்றாய் அல்லையோ''—எனக் காஸ்ஸியஸ் எடுத்துக் காட்டுகின்றான்.

(2) இலஞ்சம் வாங்கினவனைத் தண்டிக்காமல் விட்டுவிடும்படி எழுதுவது உனக்கு அழகல்லவே; ஆதலால் அழகல்லாததைச் செய்த பிழை உனதே யொழிய அதைமதிக்காத நான் உனக்குப் பிழைசெய்தேன் என்று எவ்வாறு எண்ணுதல் கூடும்—என்பது பொருள்.

(3) பூசலும் பகையுமா யிருக்கின்ற இவ்வேளையில், எவ்வகையிலேனும் வெல்வதே நோக்கமா யிருப்பதைவிட்டு, யார் என்னகுற்றஞ் செய்தார் என்று நுணுகி நுணுகி ஆராய்ந்து அதற்குத் தண்டனை விதிக்கப்புகலாமா—என்பது பொருள். குற்றத்தின் விளக்கமாவது-குற்றத்திற்குரிய தண்டனை.

(4) காஸ்ஸியஸ், மற்றவரைச் சொல்வானேன்; இலஞ்சங்கள்வாங்கிக்கொண்டு தகுதியற்றவர்களுக்கு உத்தியோகங்களைக் கொடுக்கின்ற குற்றத்தை நீயே செய்கின்றாய்—என்பது பொருள். அரிக்கின்ற அகங்கை, என்பது இலஞ்சம் வாங்குவதற்கு விரைகின்ற வழக்கத்தைக் குறிக்கின்றது. அரித்தல்=தினவு தின்னல். உள்ளங்கை அரிப்பை இலஞ்சம் வாங்கிய காசினால் சொரிந்துகொள்ளவேண்டுகின்றவன்—என்பது குறிப்பு.

(5) என்னையுமா பார்த்து நீ இப்படிப் பேசுகின்றாய்—என்பது பொருள்.

(6) நீ ப்ரூட்டஸாயிருப்பதால் நானுன்னைக் கொல்லமாட்டேன் என்னும் நிச்சயங்கொண்டு இப்படியும் பேசத் துணிகின்றாய். ப்ரூட்டஸல்லாமல்நீவேறு யாரேனுமாயிருப்பாயாயின் கடவுள்சாட்சியாக நீ இன்னொருசொல் பேசுமுன் உன்னை இப்பொழுதே கொன்றிருப்பேன்—என்பது பொருள்.

(7) நீ காஸ்ஸியஸா யிருப்பதால்தான் நானும் உன்னைத் தண்டிக்காமல் விடுகின்றேன்—என்பது பொருள்.

(8) ஸீஸர் கொலையுண்டதை நினைத்துக்கொள்—என்பது பொருள்.

(9) பொறாமையினால் காஸ்ஸியஸும், பகையினால் கேயஸ்லிகேரியஸ், டெஸ்ஸியஸ்ப்ரூட்டஸ் முதலானவர்களும் ஸீஸரைக் குத்தினார்களென்பதைப் ப்ரூட்டஸ் அறிந்திருந்தும் இது கூறுவது பொய்.

(10) ஸீஸர் எவ்வகையில் கள்வருக்குக் கைதந்தான் என்பது விளங்கவில்லை அநீதிகளுக்கு ஆதரவு அளித்தான் என்று பொதுப்பட உரைத்ததாகலாம் இது.

(11) நீதியை நிலைநிறுத்தும் பொருட்டே ஸீஸரைக் கொன்ற நாம் அநீதியாகிய இலஞ்சத்திற்கு ஆசைப்பட்டு, செத்தைக்குச் சமானமான ஒரு பிடி காசிற்குமாறாக நம் பெரிய கௌரவங்களை விற்பது இழிவன்றோ—என்பது பொருள். 'நம்மில் ஒருவன்' என்று துவக்கி 'நாம்' என வாக்கியம் பிறழ்வது, ப்ரூட்டஸின் மனக்கலக்கத்தினால் நேர்கின்றது.

(12) இணங்காதவரை இணங்கும்படி செய்துகொள்ளக்கூடிய ஆற்றல் நின்னினும் நான் அதிகம் உடையவன்-என்பது பொருள்.

(13) இப்படியும் ப்ரூட்டஸ் என்னைப் பார்த்துப் பேசும் நிலை இயன்றதாயிற்றே—என்பது பொருள்.

(14) நீ பொறுத்துத்தான் இருக்கவேண்டும், என்று வாக்கியம் முடியும். "பொறுக்காமல் நீ என்னை என்ன செய்ய இயலும்'' என சுசும் கருத்தது.

(15) உன்னுடையகோபம் பொங்கி உன் இதயம்வெடித்துக்கொள்ள வேண்டுவதன்றி என்னை நீ ஒன்றும் உன்கோபத்தால் செய்யமுடியாது—என்பது பொருள்.

ப்ரூட்டஸ்:—இத்தனையும்! ஆம், இதன் மேலும் (14). இறுமாந்த உன் இதயம் உடையும்வரையில் வெடி வெடித்திரு (15). நான் அசையவேண்டுமோ? உன் முகம்பார்த் திருக்கவேண்டுமோ? நீ சிடுசிடுத்தால் நான் ஒடுங்கித் தாழ்ந்து முன்நிற்க வேண்டுமோ? தெய்வங்கள் மீதாணை, நின்குடலிற் சுரக்கும் நஞ்சினை, அதனால் நீ வெடித்துப் போவதாயினும், நீயேதான் சீரணம் செய்துகொள்ளவேண்டும் (16) ஏனெனில்,இன்றுமுதல்,உன்னை யான் என்னுடைய களிப்பிற்கும் என்னுடைய சிரிப்பிற்கும் உபயோகப்படுத்திக்கொள்வேன் (17).

காஸ்ஸியஸ்:—இவ்வளவிற்கும் வந்துவிட்டதோ?

ப்ரூட்டஸ்:—என்னினும் நீ ஆற்றல்மிகுந்த வீரன் என்கின்றாய். அது தெரியட்டுமே; இச்செருக்கு மொழியை மெய்யாக்கு, பார்ப்போம். அதனிற்கு யான் இனிதுவப்பேன்; என்வரையில், பெருந்தகை மக்கள்மாட்டே யான் கற்க விழைகின்றேன். (18)

காஸ்ஸியஸ் :—எவ்வழியிலும் எனக்குப் பிழையே இழைக்கின்றாய் ப்ரூட்டஸ், பிழையே நீ யிழைக்கின்றாய். வயதினில் நின்னில் மூத்த வோர் போர் வீரன் என்றேனே யொழிய, ஆற்றலில் மிகுந்தவன் என்றியம்பவில்லை. ஆற்றல் மிகுந்தவன் என்று கழறினேன் நான்? (19)

ப்ரூட்டஸ்:—கழறினையாயினும் யானதனை இலக்ஷியஞ் செய்யவில்லை (20).

காஸ்ஸியஸ்:—ஸீஸர் உயிருடன் இருந்தபோது, இப்படி என்னைத் தூண்டுதற் கவன் துணிந்ததில்லை. (21).

ப்ரூட்டஸ்:—போதும் போதும் சும்மா விரு. நீயும் இப்படி யவனைச் சோதிக்கத் துணிந்ததில்லை. (22)

காஸ்ஸியஸ்:—நான் துணிந்ததில்லையா?

ப்ரூட்டஸ்:—இல்லை.

காஸ்ஸியஸ்:—என்ன! நானவனைச் சோதிக்கத் துணிந்ததில்லையா?

ப்ரூட்டஸ்:—உன் உயிரைக் கருதி, நீ துணிந்ததில்லை. (23)

காஸ்ஸியஸ்:—என்னுடைய நட்பின்மீது நீ வரம்பிகந்த நம்பிக்கை வைக்காதே (24). யான் ஏசறவு கொள்ளற்குரிய ஒன்றைச் செய்துவிடலாம் (25).

(16) குடலிற் சுரக்கும் நஞ்சு, என்பது இங்குக் கோபத்தைக் குறிக்கின்றது. "உன் கோபத்தை நீ என் மீது செலுத்தமுடியாது. கோபம் பொங்கப்பொங்க அதனை நீ அடக்கவேண்டியவனாயிருக்கின்றாய். பொங்கும் கோபத்தை அடக்க முயல்வதால் நீ வெடித்துப்போனாலும் போனாலே உனக்கு அஞ்சமாட்டேன்—என்பது பொருள்.

(17) நீ கோபித்துச் சிடுசிடுப்பதெல்லாம் இனி எனக்கு வேடிக்கையும் சிரிப்புமா யிருக்குமே யொழிய, அதைப் பொருள்படுத்தி நான் அஞ்சுவதென்பது இனி ஒருபோதும் இல்லை.

(18) வேண்டுமெனின் என்னுடன் போர்செய்ய வா-என்பது பொருள். உன்போன்ற அற்பனிடம் நான் ஒன்றும் கற்க நினைக்கவில்லை. கற்கவேண்டுமெனின் நான் தகவுடைய பெரியோரை அடுத்துக்கற்பேன்-என்பது பொருள்.

(19) பகை மிகுகின்றதென்பதை யுணர்ந்த காஸ்ஸியஸ் மெல்லப் பணியத் தலைப்படுகின்றான். வயதில் மூத்தவன் என்றேனே யொழிய வீரத்தில் மிக்கவன் என்று சொல்லவில்லையே—என்று தன் பேச்சை மாற்றிக்கொள்கின்றான்.

(20) நீ என்ன சொன்னாலும், நானுன்னை ஒரு மனுஷனாகப் பாவிக்கவில்லையாதலால். நானொன்றும் பொருள்படுத்த மாட்டேன் - என்பது பொருள்.

(21) தூண்டுதல் - சண்டை உண்டாம்படி கோபமூட்டுதல். ஸீஸருங்கூட இதற்குத் துணிந்திருக்கமாட்டானே-என்பது பொருள்.

(22) சோதித்தல் - பொறுக்க மாட்டாதவைகளைச் செய்தல். ஸீஸருக்கு அஞ்சி நீ அவன் கருத்திற்கு ஒன்றும் விரோதமாய்ச் செய்யத் துணிந்ததில்லை - என்பது பொருள்.

(23) உன் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்து உனக்கு இருக்குமாகையால் ஸீஸர் மனங் கோணும்படி யாதும் செய்ய நீ துணிந்ததில்லை. செய்தாயாயின் உன்னை அவன் உடனே கொன்றுவிடுவான் என்னும் பயம் உனக்கு அதிகம் உண்டு - என்பது பொருள்.

(24) நான் உன்பால் நட்புடையவனாகையால் நீ என்னை எவ்வளவு நிந்தித்தாலும் நான் அவ்வளவும் பொறுத்துக் கொள்வேன் என்று நம்பியிருக்கின்றாய் போலும். எனினும் அந்நட்பின் பொறுமைக்கும் ஓர் வரம்பு உண்டு - என்பது பொருள்.

(25) ஏசறவு -(Remorse). ஒன்றைச் செய்து விட்டுப் பிறகு அதனைச் செய்ததற்காக மனம் வருந்துதல். "பின்னால் மனம் வருந்துவேனாயினும், நீ தூண்டுங் கோபத்தால் நான் என்னையும் மறந்து உன்னை ஒருகால் கொன்றுவிடினும் விடலாம்," என்பது பொருள்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

ச்யாவனப்ராச

ஜீவஸுதா

பாதாமி லேகியம்

தந்வந்தரி லேகியம்



தைலங்கள்:

அமிர்தாமலக

பிருங்காமலக

ஸுகுமார

ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)

ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.ஸ்.மெடிகேடட்-டப்பி

(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப்பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணா 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciatve forword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

துறையூரில் கூடிய தமிழர் மகாநாட்டில் திருநெல்வேலி ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். செய்த பிரசங்கத்தின் சாரமாவது:—

தமிழ் மொழியோடு தொடர்பில்லாத பண்டை மொழி யாதுளது? சீன மொழியில் (ஞான்) என்பதைக் கேட்ட காலை அச்சொல்லை மலையாள மென்னுமோ? சீனர் தம்மை வானவரென்றால் சேர மன்னன் தன்னை 'வான வரம்பன்' என்பது யாதுபற்றி? (சீனர்க்குள்ள முன்குடுமி மலையாளர்க்கும் உள்ளது தானே.) சாலடியாரது பெரும் பதியின் பெயராய ஊர் என்பது இயற்றமிழ்க் கிளவியே. பாபிலோனிற்கு அருகே கிடைத்த பெஹிஸ்டேன் கற்பலகைகளின் மொழிகள் தமிழ் இலக்கணச் சார்பாயினவே. அவற்றிற் காணப்படும் கோ, நீ, என்ற சொற்கள் தமிழ்ச் சொல்லல்லவோ? டாக்டர் கால்டுவெல், மங்கோலிய மொழியொடு தமிழ் மொழியுஞ் சித்திய பெருங் குடும்ப மெனின் வட சீனரோடு தமிழரும் ஒரு காலத்தே ஒரு மொழி பேசினவ ராவ ரல்லரோ? ஜெர்மனிக்கு வடக்கே செல்வார் பின்னிய நாட்டிலே 'அன்ய' என்று தாயை அழைத்தல் கேட்டு அன்னை யென்ற தமிழ் மொழியை நினைந்து மகிழாரோ? தகப்பனைக் குறிக்கும் அப்பியென்ற சொல் அப்பா வென்ற தமிழின் திரிபன்றோ? ஐரோப்பிய ருஷ்யாவில் வால்கா நதிக்கரையில் வாழும் மக்கள் ஆம், தோல், கோழி என்ற சொற்களை வழங்குங்கால் அவர்களைத் தமிழர் என்னுமோ? ஆசிய ருஷ்யாவில் பனிக் கடற்கரையின்கண் வதியும் சாமோ யெட்டியா வழங்கும் 'அம்மா' என்ற சொல்லும் தனித்தமிழே. நெருப்பினை அன்னார் தீ என்றுதானே கூறுவர். எகிப்தியர் ஹோரஸ் என்றால் அது தொல்காப்பியர் கூறும் ஓரையை நினைவூட்டு மன்றோ? கிரீக்கர் அரிசி என்ற சொல்லையும் ஹீப்ரூ மக்கள் துகில் (மயிற்றோகை) என்ற சொல்லையுந் தமிழ் வணிகர்பாற் கற்றன தாமே. பெலுச்சி ஸ்தானத்தில் வழங்கும் பிராகுயி தமிழ் இனமன்றோ? வடஇந்தியாது உள்நாட்டு மொழிகளுக்கும் திராவிடமொழிகளுக்கும் இலக்கண அமைப்பு ஒன்றென்ற காலஞ் சென்ற கனம் பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் கூற்று உண்மையாயின் அவைகளும் தமிழினம் அல்லவோ? சில பண்டிதர்கள் ஆப்பிரிக்காமொழிகள் சிலவற்றிற்கும் தமிழுக்கும் பொருத்தங் கூறுகிறார்களே!

ஆதியிற் பனிமலை தொட்டுக் குமரிமுனைவரை இந்திய நாடெங்கும் தமிழர் பரவி யிருந்தமையால், இந்திய நாகரிகம், தமிழர் நாகரிகத்தை அடிப்படையாக உடைய தென்பதும், அதைத் தமிழ் மொழியானது கண்ணாடிபோற் காட்ட வல்லது என்பதும் டாக்டர் கில்பர்ட் ஸிலேட்டர் என்பவரால் அழகுற இயம்பப்பட்ட உண்மைகளாம்.

இதனால், இந்திய நாகரிக சரிதத்தை நன்கறிய விரும்பும் எவரும் பழந் தமிழ் இலக்கியங்களை ஆய்தல் வேண்டு மென்பது புலனாகும்.

உலகினர்க்கு இன்ப வாழ்க்கைக்கு இலக்கணம் தொல்காப்பியத்திலன்றோ உளது. காதல்மணம், கலப்பு மணம் என்னும் இக் கருத்துக்கள் ஆதித் தமிழர் உலகிற் களித்த பயன்களல்லவோ? இவை சிற்றின்பப் பகுதிய வெனின், பேரின்பப் பாடல்கள் தமிழிலுள்ள அளவு எம்மொழியிலுள்ளன? நாயன்மார்களும் ஆழ்வார்களும் அமைத்த அருளா ரமுதப் பெருங் கடல்கள் தமிழ்நிலத்தின் கண்ணேதாம் உள்ளனவாமே.

உடற்காப்புக்குத் தமிழ்மருத்துவ நூலினுஞ் சிறந்தது யாண்டுளது? தமிழர்களது மந்திரம், மருந்து, மணி, யோகம் வாதம், எல்லாம் சித்த மருத்துவ மலையிலன்றோ திகழ்வன. அவற்றைப் பாதுகாவாமையால் வந்த இழுக்கிற்கு யாவர் காரணர்?

தமிழரது கவின் கலைகள் அவர்களது அழியாத திருக்கோயில்களில் இன்றும் திகழ்வனவாமே. கட்டிடம், ஓவியம், கற்பணி, இசை கூத்து, என்பவற்றில் தமிழரை விஞ்சிய பண்டையர் யாவர்? தமிழர் திருக்கோவில் விழாக்க ளெல்லாம் தமிழர் சோதிடக் கணக்கின்படி நிகழ்வனவே. அது கதிரவன் செலவை வைத்து அமைத்த நன்முறை யன்றோ?

எக்கலையும் வளர்தற்கு இடங்கொடுத் திலங்குந் தமிழினைத் தமிழர் பாதுகாத்து உலகிற்கு உதவுதல் மெய்த்தமிழர் முதற் கடனாகும்.

உண்மைப் பற்றுடைய தமிழ்க்கல்விமான்களும் செல்வவான்களும் ஒருங்கு கூடித் தக்க முறையில் முயன்றா லன்றித் தமிழ் வளர்ச்சியாவது தமிழர் முன்னேற்றமாவது நிகழ்தல் அரிதாகும்.

தமிழர்கள்நிலவரமானமுன்னேற்றமடைய வேண்டுமாயின் ஆழ்ந்த தமிழ் நூற் கல்வியும் அதற்குத் துணையாகப் பயிலுதற்குரிய அறிவியற் கலை, சரித்திரக் கலை முதலியனவும் தமிழ்நாடெங்கும் பரவுதல் வேண்டும். தமிழை வளர்க்கக் கருதுபவர்கள் தமிழ் நூல்களை யாவரும் கற்கும்படி செய்தல் வேண்டும். இக்காலத்திலே தமிழை வளர்க்கும் அறிவாற்ற லுடையார் பலர் இருந்தும் தமிழ்வளர்ச்சி செவ்விதின் நிகழாமைக்கு ஒரு காரணம், பொழுது போக்க வாதல் அறிவின் பொருட்டாதல் தமிழ் உரைநடை நூல்களையாதல் கற்பாரின் தொகை குறைவாயிருத்தலே. தக்க தமிழ்நூற் பிரதிகளைச் சகாயவிலை கொடுத்தாயினும் வாங்குவார் மிகக் குறைபாகவே உள்ளார். அணியிலுந் துணியிலும் ஆயிரம் ஆயிரமாகச் செலவழிப்பவர்கள் தமிழ்ப் புலவர்கள் உழைத் தெழுதிய தமிழ் நூற் பிரதிகளுக்கு அரை ரூபா கொடுக்கவும் பின் வாங்குகின்றார்களே.

தமிழிலே பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய உரைநடை நூல்கள் எத்தனையோ எழுதப்படவேண்டும். சிறந்த அகராதிகள் இயற்றப்படவேண்டும். ஆராய்ச்சி நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் பல வெளியாதல் வேண்டும். இவற்றிற் கெல்லாம் கோயில்கள் ஆதீனங்கள் முதலிய பொதுநிலயங்களிலுள்ள தர்மச் சொத்துக்களின் வரும்படிகளைப் பயன்படுத்த வேண்டிய முயற்சிகள் இதுபோன்ற சங்கங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் தமது கோவில்களிலே அறிவைச் செவ்வையாக வளர்ப்பது கண்டும், சிவாகமங்களெல்லாம் சமய நூல்களையும், பிறநூல்களையும் கோயில்களிற் பேணிப் பயன் படுத்துவதை வற்புறுத்தவும் நமது மடங்களும், கோயில்களும் மூடபக்தி [illegible] மூண்டொளிர்கின்றனவே. இ[illegible] பரிதாப[illegible] லோகோபகாரி"

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சுரைன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பெரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இலும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. ௩. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்

ஜோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)